# முரசொலி

வார இதழ்

ஆசிரியர் மு. கருணாநிதி

2 அணா

முரசு 2 | சென்னை | 18—11—55 | வெள்ளி | ஒலி 34




## கலைவாணருக்குப் பொன்னாடை [பக்கம்-9]


"அறிவக நிலையம்"
செய்தித்தாள், நூல், தாம்பூல விற்பனை
சு. வெ. தங்கசாமி,
5, மந்தவெளி சந்து, மயிலை




## (6) நடிப்புச் சுதேசிகள்!

சுதேசம் பேசியவர்கள் தான் இன்று செங்கோல் செலுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

மூட்டை மூட்டையாக மாஸ்கோ மல்லே தெரு மூலையிலே குவித்து, கொள்ளி வைத்த கனவான்கள்தான் ஆட்சித் தேரின் சாரதிகளாக இருக்கிறார்கள்!

அப்பென்றும் சீனி என்றும் உள்நாட்டுச் சேலை என்றும் செப்பித் திரிவாரடி!—கிளியே செய்வதறியாரடி!

—என்று பாரதியாரைப் பாட்டெழுதச் சொல்லி அந்நிய மோகத்தைப் பழித்து அறிவூட்டினார்கள்.

துணிகள் உடுத்துவதிலே சுதேசம்! சோப்பிலே சுதேசம்! எழுதும் ஏட்டிலும் சுதேசம்!—என்று காந்தியார் வகுத்துக் கொடுத்த தாரக மந்திரம் இது!

ஆனால் இந்த மூலக் கொள்கை புல்கானினுடைய ஆகாய விமானம் டெல்லியில் தரை தட்டியதும் தவிடுபொடியாகப் போகிறது!

சதையைத் தீ சுட்டாலும் சுதேசக் கொள்கை மறவோம்—என்று யாரார் முழங்கினார்களோ அவர்களெல்லாம் அன்று அந்நியர் மோகத்திற்குக் கட்டுப்படப் போகிறார்கள்!

ஆமாம்; மோதிலால் மைந்தருக்கு மாஸ்கோ விமான நிலையத்திலே எப்படியெப்படி வரவேற்பு கொடுக்கப்பட்டதோ அதே நகல்தான் இங்கும் புல்கானினுக்கு அமுலாக்கப்பட இருக்கிறது.

புல்கானினுக்கு நல்லமுறையில்—அவரது மதிப்புக் கேற்ற வகையில் வரவேற்பு கொடுக்கப்படட்டும். ஆனால் அவைகளையெல்லாம் ரஷ்ய பாணியில்தான் செய்ய வேண்டுமா?

மாஸ்கோ அச்சின் வார்ப்படங்கள்தான் டெல்லி விமான நிலையத்தில் விருந்தாளி புல்கானினுக்கு வழங்கப்பட வேண்டுமா?

—இந்தக் கேள்விகளைத்தான் சர்க்காரிடம் கேட்கத் தூண்டுகிறது.

ரஷ்ய நாட்டிலே நேருவையும், அவரது புதல்வியாரையும் புல்கானின் சந்தித்தபோது அவர்களை இராணுவம் அணிவகுத்து நின்று வரவேற்றது.

செய்திப் படங்களிலே பார்த்திருக்கலாம்—ரஷ்யாவில் இராணுவங்கள் அணிவகுத்துச் செல்வதே தனி பாணியாக இருக்கும். அதாவது, முகத்தை மட்டும் விருந்தினர்பால் திருப்பிக் கொண்டு, உடலை வளைக்காமல் நடந்து சென்று மரியாதை தெரிவிப்பார்கள்.

—இது ரஷ்யாவிலே இருந்து வரும் பழக்கம்! இந்திய இராணுவம் கடைப்பிடிக்கும் முறையிலிருந்து மாறுபட்டது!

சுதேசத்திலே வெறி கொண்ட இவர்கள் டெல்லி விமானக் கூடத்திலே எவ்வித அணிவகுப்பு மரியாதை காட்ட வேண்டும்?

தேசிய வீரர்களின் பழங்கால சரித்தையும், பாரதிரும் வாய்ப்பறை முழக்கத்தையும் உணர்ந்தவர்கள் நினைக்கலாம், வழக்கம்போல எல்லா வெளி நாட்டாருக்கும் அளிக்கப்பட்ட முறைதான் இந்தத் தடவையும் நடைபெறும் என்று!

ஆனால் அதுவல்ல நடக்கப் போவது!

புல்கானின் டெல்லியிலே இந்திய முறையில், இந்திய இராணுவம் தரும் அணிவகுப்பைப் பார்வையிட முடியாது!

ஆமாம்; அரசாங்கத்தின் உத்தரவின்படி ரஷ்ய பாணி அன்றைய தினம் இராணுவத்தை ஆக்ரமிக்கப் போகிறதாம்!

மாஸ்கோவிலே நேரு எதைக் கண்டாரோ அதுவே புல்கானினுக்கும் திருப்பிக் காட்டப்படும்!

டெல்லி விமான நிலையத்திலே—நவ பாரதத்தின் தலைநகரிலே 'இமிடேஷன்' நடைபெறப் போகிறது!

இராணுவம் அணிவகுத்துச் செல்லும்போது, மாஸ்கோ மாடலிலே அவர்கள் தலைகள் யாவும் பார்வையாளர் பக்கம் திரும்பிவிடுமாம்!

'இந்த முறை அற்பத்தனமாயிருக்கிறதே! காப்பியடித்துத்தான் நம்முடைய கௌரவத்தை நிலைநாட்டிக் கொள்ள வேண்டுமா?"—என்று உயர்தர அதிகாரிகளில் சிலர் நினைக்கிறார்களாம். என்ன செய்வது? அரசாங்க உத்தரவாயிற்றே; அலகாபாத் வீரரின் பிரியமாயிற்றே; எப்படி மீற முடியும்?

இந்த மாஸ்கோ மாடல் அணிவகுப்புக்கு நல்லவிதத்திலே ஒத்திகை தரப்பட்டு, அதற்கு எந்த விதத்தில் வரவேற்பு இருக்கிறது?—என்பதும் இந்தோனிஷியாவிலிருந்து டாக்டர் ஹட்டா வந்திருந்தபோது, அவரது முன்னிலையில் நடத்திக் காட்டி சோதிக்கப் பட்டிருக்கிறது!

அதுமட்டுமா? அந்நிய மோகத்திலே மோதிலால் மைந்தருக்குள்ள வேகம் அரசாங்கத்திற்கு இன்னும் என்னென்னவோ செலவுகளையெல்லாம் ஏற்படுத்தியிருக்கிறது.

ரஷ்யாவிலே குழந்தைச் செல்வங்களுக்குத் தனிமதிப்பு; தனி கண்காணிப்பு! ஒவ்வொரு தேசியத் திருவிழாக்களின் போதும் குழந்தைகளின் அணிவகுப்புகள் நடைபெறுகின்றன! நேரு சென்றிருந்தபோதும் குழந்தைகள் அணிவகுப்பு ஒன்று நடத்திக் காட்டப்பட்டது.

இங்கும் அதேபோல் குழந்தைகள் அணிவகுப்பு நடைபெறப் போகிறதாம்!

அதற்காக டெல்லியின் பள்ளிகளிலேயுள்ள முப்பதினாயிரம் குழந்தைகள் தினந்தோறும் லாரிகளில் குதுப்மினார் மைதானத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டு, புல்கானின் வரும்போது அணிவகுத்து நிற்பதற்கான ஒத்திகைகள் நடைபெற்றுவருகின்றனவாம்!

இந்தத் திடீர் ஆயத்தங்களை யாராவது பார்த்து, வயிறு வெடிக்கச் சிரிப்பார்களோ—என்று வெட்கப்பட்டு, இந்தக் குழந்தைகள் அணிவகுப்பின் ஒத்திகையை டெல்லி நகருக்கு அப்பால் பத்து மைல் தாண்டி நடத்தி வருகிறார்களாம்!

நடத்தட்டும்—என்றைக்கும் இந்த அணிவகுப்பும், அன்பு உபசரிப்பும் குழந்தைகளுக்குத் தரப்பட்டால் நாமும் இதிலே பெருமை கொள்ளலாம்!

ரஷ்யாவிலே பிள்ளைக் கனிய முதுகளுக்குக் கொடுக்கப்படும் பெருமை இங்கும் வழங்கப்பட்டால் குதுப்மினார் மைதானத்திலே நடைபெற்றுவரும் ஒத்திகைகளுக்கு எல்லோருடைய ஒத்துழைப்பையும் தரலாம்!

அங்கே குழந்தை பிறந்தால் பரிசு கிடைக்கிறது. பத்து குழந்தைகள் பெற்றால் அந்தத் தாய்க்கு பதக்கமும், பட்டமும் கிடைக்கின்றன.

ஆனால் இங்கே குழந்தை பிறந்தால் குடிமுழுகிப் போய் விடும் என்ற நிலையல்லவா உலவுகிறது!

ரஷ்யாவிலே நேருவுக்கு குழந்தைகளின் அணிவகுப்பை நடத்தினார்களென்றால் அது அன்றாடம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் விளையாட்டுகளில் ஒன்று; இராணுவ மரியாதையைப்போல அதற்கும் அங்கே தனிமதிப்பு ஏற்பட்டு விட்டது; ஆனால் இங்கே பாலுக்கு அழுது அழுது மண்ணுக்குக் கீழே உறங்கிக் கொண்டிருக்கும் பாலகர்கள் எத்தனை பேர்? அநாதைகளாய் காற்றைப் போல நாட்டைச் சுற்றிக் கொண்டிருக்கும் சிறுவர்களின் எண்ணிக்கை எவ்வளவு?

—இவைகளையெல்லாம் தடுத்து நிறுத்த எந்தவித முயற்சிகளையும் எடுத்துக் கொள்ளவில்லை. புல்கானினுக்கு வேடிக்கை காட்டுவதற்கு மட்டும் பயிற்சி நடத்துகிறார்களாம், அந்தப் பாலகர்களின் அணிவகுப்பு இயற்கையாக இருக்க வேண்டுமென்பதற்காக!

குழந்தைகளின் ஒருநாள் கூத்தை புல்கானின் பார்வையிடப் போகிறார். பாலம் விமான நிலையத்திலே சிரிக்கும் பாலகர்களின் மதிமுக வதனத்தைப் பார்ப்பார். ஆனால் அந்தக் குழந்தைகளின் ஆயிரக் கணக்கான சகோதரர்கள் அன்றுடம் ஆற்றோரத்திலே—குளக் கரையிலே—தாழம்புதர்களின் இடையிலே—கழுத்து நெறிக்கப்பட்டு செத்துக் கொண்டிருப்பதை அவர் பார்க்க முடியாது! தந்தை பெயர் தெரியாமல், விபச்சாரத்தின் நினைவுச் சின்னங்களாய் ஆயிரமாயிரம் குழந்தைகள் விளுக்கப்படுவதையும், அதற்கு இந்த அரசாங்கமும் உடந்தையாக, பம்பாயிலுள்ள 'காமாட்டிபுரங்கள்' போன்றவைகளை அனுமதித்துக் கொண்டிருப்பதையும் அவர் உணர முடியாது!

ஆனால் வாழ்நாளில் முதல் தடவையாக குதுப்மினார்

★ தொடர்ச்சி 10-ம் பக்கம்

# தலையங்கம்

காதலிலே கவிதையிலே களம் போதும் பேச்சு;
கணவனுக்கும் மனைவிக்கும் திராவிடமே மூச்சு!

சென்னை 18—11—55 வெள்ளி

## கடமை 'லேபிள்'!

நேருவை அழைத்து வந்து நாடெல்லாம் நகரா முழங்கி நடத்தப்பட்ட மாட்டுப் பெட்டிக்காரர்களின் தேர்தல் நாடகம் முடிவுக்கு வந்துவிட்டது. பல இடங்களில் தோல்வியும், தலை தூக்க முடியாத நிலையும் காங்கிரஸ் கட்சிக்கு ஏற்பட்டிருக்கிறது. காஞ்சிபுரம் நகர சபைத் தலைவர் தேர்தலில் சுயேட்சை அபேட்சகர் ஒருவர் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார் ஆறு காங்கிரஸ்காரர்கள் தங்கள் கட்சிக் கட்டுப்பாட்டையும் மீறி அவருக்கு ஓட்டளித்திருக்கின்றனர்.

மதுரையிலே பெரும்பான்மை உறுப்பினர்கள் இருந்தும் ஒரே ஓட்டு வித்யாசத்தில் காங்கிரசுக்கு சேர்மன் பதவி கிடைத்திருக்கிறது.

வேலூரிலே வட ஆற்காடு மாவட்ட தி. மு. கழகப் போதக் குழு உறுப்பினர் சாரதி காங்கிரஸ் அபேட்சகரோடு சரிசமமான வாக்குகள் பெற்றிருந்தும், இறுதியில் சீட்டுக் குலுக்கிப் போடும்போது அது பாதகமாக இருந்த காரணத்தால் தலைவர் நாற்காலியை காங்கிரஸ் அடைந்திருக்கிறது.

தொகுதிகளில் வாக்காளர்கள் கைவிட்டதைப் போலவே பல இடங்களில் சொந்தக் கட்சிக்காரர்களே தங்கள் சொந்தக்காரர்களைக் கைகழுவி விட்ட கேவலமான சூழ்நிலையை காமராசர் கண்காணிப்பில் இருந்துவரும் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சி தாங்கிக் கொள்ள வேண்டிய பரிதாபகரமான காட்சியைக் காண்கிறோம்.

மெஜாரிட்டி இருந்தபோதும்கூட கைப்பொருளை வீணாக்கியும், சக்திக்கு மீறிய அளவில் வட்டி வேந்தர்களிடம் சரணடைந்து கடன் வாங்கியும், ஒருசில ஓட்டுகளின் மூலமே காங்கிரஸ் கனவான்கள் தங்களுடைய பதவிவெறியை ஆற்றிக் கொண்டிருக்கிறார்கள். ஓட்டாண்டி யாகும் நிலையை அடைந்தாலும் பரவாயில்லை; அந்தப் பஞ்சுமெத்தை நாற்காலியில் மீண்டுமொரு தடவை உட்கார்ந்துவிட வேண்டுமென்ற நோக்கத்தில் என்னதான் அப்படி மோகமிருக்கிறதோ நமக்குத் தெரியவில்லை. ஆனால் ஒன்று மட்டும் மெய்ப்பிக்கப் பட்டிருக்கிறது; காங்கிரசில் சேர்ந்து கதருடை அணிந்து கொள்வதால் மட்டுமே பூட்டியிருக்கும் இரும்புப் பெட்டியைத் திறக்க வேண்டியதில்லை—என்று கனவு கண்டவர்களெல்லாம் இன்று கன்னத்தில் கைவைத்துக் கொண்டு கதறியழும் வேடிக்கையைப் பார்க்கிறோம். 'முனிசிபல் தேர்தல் ஒன்றுதான் பொருளாதார மேடு பள்ளங்களைச் சமன் செய்யும் புதிய பொதுவுடைமைத் தத்துவம்'—என்ற கேலிப் பழமொழியும் உண்மையாகவே பலித்திருக்கிறது.

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் கக்கன் சென்றகிழமை தன் கட்சிக்கு ஏற்பட்ட கதி கண்டு சீறியிருக்கிறார். தலைவர் தேர்தலில் காங்கிரஸ்காரர்கள் தோல்வி பெற்றது குறித்தும், காங்கிரஸ் கவுன்சிலர்களே தங்கள் அபேட்சகர்களை 'அதோகதி'யில் விட்டு சுயேச்சைகளுக்கு ஓட்டளித்தது குறித்தும் கக்கன் விசாரணை நடத்தப் போகிறாராம். விபரங்கள் யாவும் கிடைத்த பிறகு கட்டுப்பாட்டை மீறிய காங்கிரஸ்காரர்கள் மீது நடவடிக்கையும் எடுக்கப் போகிறாராம்.

—கமிட்டி கூட்டி முடிவு செய்திருக்கிறார், காமராசரின் நிழல் போன்றவர்!

காஞ்சியிலும், மதுரையிலும், தமிழ் நாட்டின் பல இடங்களிலும் காரி உமிழத்தக்க நிலை. நேருவின் நீண்ட பேச்சிற்குப் பிறகும் ஏற்பட்டிருப்பது உண்மையிலேயே கக்கனும், அவர் கூட்டத்தாரும் அவமானப்படத்தக்க நிகழ்ச்சிகள்தான்.

இந்த நகரசபைத் தேர்தல் காங்கிரஸ்காரர்களுக்கு நரக வேதனையைத்தான் தந்திருக்கிறது!

கூடவிருக்கும் காங்கிரஸ் மண்டபத்திற்கு இந்த முடிவுகள் ஒரு மாபெரும் அதிர்ச்சிதான்!

த. கா. கமிட்டி வேண்டுமானால் இதை உணரமுடியாத அளவுக்கு தடித்த தோல் படைத்ததாய் இருக்கலாம். ஆனால், எல்லோருக்கும் புலப்படும் இந்த உண்மையை உணர்வதற்கு விசாரணைகள் தேவையில்லை.

ஆசியாவின் ஜோதி வந்திருந்து, சுவரொட்டிகளும், துண்டு நோட்டீசுகளும் செய்யக்கூடிய வேலைகளை செய்து முடித்திருந்தும்கூட எப்படி இந்தத் தேர்தலிலே காங்கிரசை இருள் கவ்வியது?

வருகிற பொதுத் தேர்தலுக்கென திட்டமிட்டு நடத்தப்பட்ட இந்த ஒத்திகை சோகக் கட்டத்தில் முடிவானேன்?

—சாதாரண காரணங்கள்தான் இந்தச் சாய்வுக்குப் பின்னணியாக இருக்கின்றன.

தெருவோரக் கடைகளுக்கு வரி வசூலிக்கவும், சாக்கடையைச் சுத்தம் செய்யவும் உண்மையான தொண்டர்களை—உள்ளன்பு கொண்ட கடமை வீரர்களைத்தான் பொது மக்கள் விரும்புகிறார்களே தவிர, கட்சி 'லேபிளை' முதுகிலே ஒட்டிக் கொண்டு, மற்ற நேரங்களிலே முள்ளம் பன்றிபோல யாரும் நெருங்க முடியாத அளவில் கேளிக்கை புரியும் கோமான்களை விரும்பவில்லை.

இதை உணர மறுத்த காங்கிரஸ், கோஷா வேஷத்துடன் கோடை மாளிகையில் ஒளிந்துகொண்டு, தேர்தல் என்றதும் குழந்தை குட்டிகளோடு ஓட்டுப் பிச்சைக்கு அட்சய பாத்திரம் ஏந்திகளை நம்பி களத்திலே குதித்தது.

உண்மைத் தொண்டர்கள்; பொது மக்களது வாழ்விலும், சாவிலும் பங்குகொள்ளும் பத்தரை மாற்றுத் தங்கம் நிகர் தோழர்கள்— மாட்டுப் பெட்டிக்காரர்களால் தூக்கியெறியப்பட்டார்கள்.

அதுமட்டுமோ? வெள்ளிக் காசுகளைக் கொண்டே விலை மதிப்பில்லா ஓட்டுச் சீட்டுகளை பண்டமாற்று செய்யும் பண்பு கெட்ட செயலை இந்த நாட்டிலே நடமாட விட்டவர்களும் இந்தக் காங்கிரஸ்காரர்கள்தான்!

பணத்தைப் பேசவைத்து ஜனநாயகத்தைப் பிணமாக்கினார்கள். இன்று அந்தப் பிணமே பேயாக வந்து கக்கனையும், அவர் சார்ந்திருக்கும் கூடாரத்தையும் மிரட்டிக் கொண்டிருக்கிறது!

சதைக் கொழுப்பும், பணக் கொழுப்பும் கொண்டவர்களின் கூட்டுறவை நாடியதால் இன்று காங்கிரஸ் குப்பை மேட்டிற்குக் குடிபோய்விட்டது!

—இந்தத் தேர்தல் தந்த நல்ல முடிவுகளுக்குப் பிறகாவது கட்சிக்கும், நகரசபைகளுக்கும் சம்மந்தமில்லை என்பதை மாட்டுப் பெட்டிக் கனவான்கள் உணர்வார்களென எதிர்பார்க்கிறோம்.

கொசுக்களின் எண்ணிக்கையைக் குறைக்கவும், சாலை நடுவே கிடக்கும் பசுக்களின் சாணத்தை அப்புறப்படுத்துவதற்கும் கட்சி லேபிள் தேவையில்லை; கடமை லேபிள்தான் தேவை என்று அறிவித்து, தங்கள் பங்கைச் சரிவர செலுத்திவிட்டார்கள், பொதுமக்கள். அதை, சரியான தருணமாகிய இந்தச் சந்தர்ப்பத்தில் உணர்ந்து திருந்த வேண்டியதுதான் கக்கன் போன்றோருக்கு கண்ணியம் தரும் செயல்! செய்வார்களா? ★

"நடுத்தெரு நாராயணி"— பிற்பகுதி
அடுத்த ஒலியில்.

# 'ஜனசக்தி' யாருக்கு...!

ஜனசக்தி ஆசிரியர் அவர்களுக்கு,
வணக்கம்.

30-10-55 தேதியிட்ட 'ஜனசக்தி' இதழில், ஐ. மா. பா.என்பவர் 'தி.மு.க. தலைவர்களும் ரயில்வே தொழிலாளர்களும்' என்ற தலைப்பில் எழுதியுள்ளதில் தென்பகுதி ரயில்வேமென்ஸ் யூனியனைப் பற்றியும் எழுதியுள்ளபடியால், யூனியன் தலைவன் என்ற முறையில் நான் பதில் எழுத கடமைப்பட்டுள்ளேன். இதைத் தங்கள் இதழில் வெளியிடும்படி பணிவுடன் வேண்டிக் கொள்ளுகிறேன்.

"தென்பகுதி ரயில்வேமென்யூனியனில் ஈடுபட்டிருப்போர் தி. மு. கழகத்தின் அடிப்படை கொள்கைகளுக்கு ஒத்த கருத்துடையவராக விளங்கி வருகின்றனர். மற்ற ரயில்வே தொழிற் சங்கங்கள் தொழிலாளரின் பொருளாதார நிலையை மட்டும் கவனிக்க ஏற்பட்டனவாக இருக்கின்றன, ஆகவே ரயில்வே மென்ஸ் யூனியனில் சேருங்கள்" என்று தி. மு. கழக பொதுச் செயலாளர் எழுதியதை எடுத்துக்காட்டி, அதுபோல் கம்யூனிஸ்ட்டுகள் லேபர் யூனியனில் நடந்துகொள்வதில்லை—என்று எழுதப்பட்டுள்ளது.

தென்பகுதி ரயில்வே மென்ஸ் யூனியனில் சகல கட்சி அனுதாபிகளும் உள்ளனர். பொன்மலையில் மட்டும் திராவிட வாலிபர் கழகத்தவர் யூனியன் நிர்வாகப் பொறுப்பில் உள்ளபடியால் அவர்கள் தி. மு. கழக அனுதாபிகளை யூனியனில் சேர்ப்பதில்லை. இது தொழிற் சங்க இயக்கத்திற்கு ஊறு தேடும் கொள்கையாகையால் அவர்களையும் சேர்க்க வேண்டுமென்று நான் வலியுறுத்தியதுடன் பொன்மலையில் பல தொழிலாளர்களுடைய செல்வாக்கைப்பெற்றுள்ள தோழர் பராங்குசம்அவர்களையும், அவரைச் சார்ந்த தோழர்களையும் யூனியனில் சேர வேண்டுமென்று கேட்டுக் கொண்டேன்.

அரசியலில் தி. கழகத்திற்கும், தி. மு. கழகத்திற்கும் கருத்து வேற்றுமை உள்ளபடியாலும், தோழர் பராங்குசம் தி. மு. கழக அனுதாபியானபடியாலும், அவர் தி. மு. க. பொதுச் செயலாளரை யோசனை கேட்டார். அதற்கு தி. மு. கழக பொதுச் செயலாளர் எஸ். ஆர். எம். யு. தான் கழகம் ஆதரிக்கக் கூடிய கொள்கையுடையதாகையால் அதில் சேருங்கள்—என்று யோசனை கூறினர். இதை 'ஒற்றுமையை சிர்குலைக்கும் செயல்' என்று ஐ. மா. பா. கூறுகிருர். ஒதுங்கி நிற்கும் தொழிலாளர்களை யூனியனில் சேருங்கள் என்று சொல்லுவது சங்கத்தைப் பலப்படுத்துவதாகுமே யொழிய எப்படி சிர்குலைக்கும் செயலாகும் என்று எனக்குப் புரியவில்லை. தி. மு. கழக அனுதாபிகள் ஒதுங்கி நிற்கவேண்டும்—அல்லது தனி யூனியன் ஆரம்பிக்க வேண்டுமென்று ஐ. மா. பா கருதுகிருர் போலும்.

ஒரு அரசியல் கட்சி குறிப்பிட்ட தொழிற் சங்கத்தை ஆதரிப்பது என்பது நடைமுறையில் உள்ள கொள்கையே. உதாரணமாக நீங்கள் சார்ந்துள்ள கம்யூனிஸ்ட் கட்சி, அகில இந்திய ரீதியில் இயங்கும் ஐ. என். டி. யூ. சி. யை ஆதரிப்பதில்லை. மாருக ஏ.ஐ. டி. யூ. சி.யை ஆதரிக்கிறது. காரணம் ஐ. என். டி. யூ. சி. கொள்கைக்கும், கம்யூனிஸ்ட் கட்சி கொள்கைக்கும் ஒத்து வரவில்லை. அதேபோல் தென்பகுதி ரயில்வேயில் உள்ள எம்பிளாயிஸ் யூனியனையோ, 'அசோஷியேஷ'னையோ, எஸ். ஆர். எம்.யூ.வையோ ஆதரிப்பதில்லை. ஆனல் லேபர் யூனியனை ஆதரிக்கிறது. காரணம் லேபர் யூனியன்தான் சிறந்த ஸ்தாபனம் என்று உங்கள் கட்சி எண்ணுகிறது. பல தொழிற் சங்கங்கள் உள்ள இடத்தில் இன்னதுதான் சிறந்தது என்று கூறி அதை ஆதரிக்க கம்யூனிஸ்ட் கட்சிக்கு உரிமை இருப்பது போல் தி. மு. கழகத்திற்கும் உரிமை உண்டு. லேபர் யூனியன்தான் சிறந்த ஸ்தாபனம்; அதை ஆதரியுங்கள்—என்று கம்யூனிஸ்ட் கட்சி சொல்லுவது போல், எஸ். ஆர். எம். யு. தான் சிறந்த ஸ்தாபனம்; அதை ஆதரியுங்கள்—என்று சொல்ல தி. மு. கழகத்திற்கும் உரிமை உண்டு. இந்த உரிமையை கொடுக்க மறுக்கிருர் ஐ. மா. பா. ஏன்? ஒதுங்கி நிற்கும் தொழிலாளர்களும் எஸ், ஆர். எம். யு. வில் சேர்ந்தால் அது மாபெரும் சக்தியாக இயங்கும்; அதனுல் கம்யூனிஸ்ட்கள் பிடியிலுள்ள லேபர் யூனியனின் செல்வாக்கு மங்கும்—என்ற பயம். எஸ். ஆர். எம். யு.வை வளரவிடாமல் தடை போடும் எண்ணத்துடன் அது எழுதப்பட்டதென நான் திட்டமாகக் கூறமுடியும்.

தி. மு. கழகத்தின் அரக்கோணத் தீர்மானம்—பேரூர் முடிவு இவைகளைப்பற்றி விளக்கமெழுதும் பொறுப்புப் கழக பொதுச் செயலாளருடையதாகையால் நான் இதைப்பற்றி மேலும் எழுதவில்லை.

ஐ. மா. பா எழுதியுள்ளபடி "தொழிலாளர்களுக்கு பகுத்தறிவைப் புகட்டிய பிற்பாடுதான் பொருளாதாரக் கோரிக்கைகளைப் பெறமுடியும்." என்று எஸ். ஆர். எம். யு. சொல்லவில்லை. பொருளாதாரக் கோரிக்கைகளைப் பெற முயற்சி செய்யும் போதே சமுதாய முன்னேற்றத்திற்கும் உழைக்க வேண்டுமென்பதுதான் எஸ். ஆர். எம். யுவின் கொள்கை.

லேபர் யூனியன்தான் பல போராட்டங்கள் செய்துள்ளதென்றும், அதில் உள்ள பலர் தியாகம் செய்துள்ளனர் என்றும் கூறப்பட்டுள்ளது. ரயில்வேத் தொழிலாளர்களின் போராட்ட சரித்திரத்தை மீண்டும் படிக்கும்படி தோழர் ஐ. மா. பாவைக் கேட்டுக் கொள்ளுகிறேன். அகில இந்தியாவிலும் உள்ள ரயில்வேத் தொழிலாளர்கள் 1946 ஜூன் 27-ல் வேலை நிறுத்தம் செய்ய முடிவு செய்து, அதற்காக தென் இந்திய ரயில்வேயில் 12 பேர் கொண்ட கமிட்டி நியமிக்கப்பட்டது. அதில் நானும் ஒருவன். 1946 ஆகஸ்ட் 25-26ல் உரிமைக்காக வேலை நிறுத்தம் நடந்தது: அதை நடத்திய அறுவரில் நானும் ஒருவன். இப் போராட்டங்களின் விளைவாக இருமுறை சிறையும் சென்றுள்ளேன்; பொருள் நட்டமும் அடைந்துள்ளேன். என் தலைமையில்தான் எஸ். ஆர். எம். யு. இயங்கி வருகிறது. பிறர் செய்துள்ள சேவையை, தியாகத்தை மறைப்பது நல்ல பண்பாகாது.

"தொழிலாளர்களது நலனைப் புறக்கணித்து முதலாளிகளுக்கு மறைமுகமாக ஆதரவு தருவதால்..." என எழுதப்பட்டுள்ளது. இதைப் படித்த பின் எனக்கு பழைய சம்பவங்கள் ஞாபகத்திற்கு வந்தது. 1949-ல் சிறையிலிருந்தபோது ஒவ்வொருவருக்கும் குற்றப் பத்திரிகை வந்தது. அதில் "நீ சதி வேலையில் ஈடுபட்டாய்; அரசாங்கத்தைக் கவிழ்க்கத் திட்டமிட்டாய்; ஆயுதங்களை உடைக்க திட்டமிட்டாய்; கம்யூனிஸ்ட்டுகளுடன் தொடர்பு வைத்திருந்தாய்"—என்றெல்லாம் எழுதப் பட்டிருந்தது. இப்படியே எல்லோருக்கும் இருந்தது. எங்கு, எப்பொழுது, எப்படி, எவருடன் சதி செய்யப்பட்டது? அதனுல் ஏற்பட்ட நட்டமென்ன? கம்யூனிஸ்ட் கட்சியில் தொடர்பு வைத்திருந்தால் ஏற்பட்ட பாதகம் என்ன?—என்றெல்லாம் விளக்கப்படவில்லை. குறிப்பாக எழுதாமல் இப்படி குறிப்பிட்டதை எடுத்துக்காட்டி வழக்கு மன்றங்களில் வழக்காடி அரசாங்கத்தின் குற்றச்சாட்டு பொய், என்று நிரூபித்த பெருமை கம்யூனிஸ்ட் கட்சியைச் சாரும். அப்பேர்ப்பட்ட கட்சியைச்சேர்ந்த ஐ. மா. பா. எழுதுகிருர்; "முதலாளிகளுக்கு மறைமுகமாக ஆதரவுதருவதால்" என்று. யார் தந்தார்கள்? எப்பொழுது தந்தார்கள்? எந்த வகையில் தந்தார்கள் என்று ஏன் எழுதப்படவில்லை? எஸ். ஆர். எம். யூ ஆரம்பித்தபின் வீட்டு வாடகையை உயர்த்தியதற்காக கிளர்ச்சி நடந்ததே,அதில் எஸ். ஆர். எம்.யூ கலந்து கொள்ளவில்லையா? எந்த கிளர்ச்சியில் எஸ். ஆர். எம். யூ. பின் வாங்கியது? முதலாளிக்கு எந்த வகையில் எஸ். ஆர். எம். யூ. ஆதரவு தந்தது? கூறமுடியுமா ஐ. மா. பா? சாதாரண ஏடுகளில் இப்படி பொருத்தமற்ற முறையில் எழுதலாம். கம்யூனிஸ்ட் கட்சியின் இதழிலா இப்படி எழுதுவது?

"நம்பிக்கையில்லாத் தீர்மானங்களும், எதிர்ப்புகளும் அதிகமாகி விட்டது" என்கிருர். இப்படி நடப்பது இயற்கைதானே. இதை நீங்கள் மறுக்க முடியுமா? கட்சிகளில் மிக நல்ல முறையில் அமைக்கப்பட்டுள்ளது கம்யூனிஸ்ட் கட்சி. இந்திய பிரதமர் நேரு கூட பாராட்டியிருக்கிருர். அப்பேர்ப்பட்ட கட்சியில் மேற்கண்ட சம்பவங்கள் ஏற்படவில்லையா? கம்யூனிஸ்ட்டுகளின் தாயகமான ரஷ்யாவை எடுத்துக் கொள்வோம். 21—1—1924—ல் லெனின் இறந்தபின் கட்சியின் பொதுச் செயலாளராக இருந்த ஸ்டாலினுக்கும், புரட்சி இராணுவ கவுன்சிலின் அதிபராக இருந்த டிராட்சிக்கும், கம்யூனிஸ்ட் அகிலத்தின் தலைவராயிருந்த சினேவுக்கும்இடையில் போராட்டம் நடக்கவில்லையா? முடிவில் ஸ்டாலின் வெற்றி பெற்று மற்றவர்களை ஒழிக்கவில்லையா? ஸ்டாலின் இறந்தபின், மாலன் கோவ், மாலடோவ், பெரியா முக்கூட்டு அணி உருவாகி பணி செய்யும்போது பெரியா பலியிடப் படவில்லையா? முடிவில் மாலன் கோவ் விலக, புல்கானின் வரவில்லையா? இந்தியாவை எடுத்துக் கொள்வோம். கட்சியைக் கட்டி வளர்த்த பி. சி. ஜோஷி வகுத்த பாதை தவறு என ரணதிவே கூறி, ரணகளத்தை உண்டு பண்ணவில்லையா? பிறகு அப்பாதை தவறு என அவரை விலக்கி அஜாய் கோஷ் வரவில்லையா? இவை எல்லாம் ஏன் ஏற்பட்டன? அதுவும் நல்ல முறையில் கட்டப்பட்ட கம்யூனிஸ்ட் கட்சியில் இதுமாதிரி சம்பவங்கள் இயற்கை—தவிர்க்க முடியாதன. இதை பெரிது படுத்தி எழுதுவது சரியல்ல.

ஆகையால் இம்மாதிரியெல்லாம் பொருப்பற்ற வகையில் எழுத வேண்டாமென பணிவுடன் வேண்டிக் கொள்ளுகிறேன்.

அன்புள்ள,
சீ. இராகவானந்தம்
தலைவர், தென்பகுதி ரயில்வே
மென்ஸ் யூனியன்.

---

## கொள்கை வளருது கோபுரம் போலே!

### சேலம்

20—11—55 ஞாயிறு காலை 10—மணிக்கு, சித்தேஸ்வராவில் அறிஞர் அண்ணு அவர்கள் பேசுவார் (நன்கொடை: அணு 8, பெண்கள் அணு 4)

அன்று மாலை 6-30 மணிக்கு, ப. மார்க்கெட்டில் நடைபெறும் பொதுக் கூட்டத்தில் அறிஞர் அண்ணு அவர்கள் பேசுவார்.

### மேலச் சின்னணம்பட்டி
[மதுரை மாவட்டம்]

22—11—55 செவ்வாய் மாலை நடைபெறும் பொதுக் கூட்டத்தில், தோழர்கள் ஈ. வி. கே. சம்பத், முத்து, கே. எஸ். சந்தானம், மணியன் — ஆகியோர் பேசுவர்.

### ஆனையாம்பட்டி
(சேலம் மாவட்டம்)

23-11-55புதன் மாலை 6மணிக்கு, தி. மு. க. கிளையின் நான்காம் ஆண்டு விழாவும், மாநில மாநாட்டு நிதி அளிப்பும், தோழர் ஆர். மாரிமுத்து அவர்கள் தலைமையில் நடைபெறும். அறிஞர் அண்ணு அவர்கள் பேசுவார்.

### ஒண்டிப்புதூர்

26-11-55 சனி மாலை 6 மணிக்கு, பாண்டியனுர் திடலில், தோழர் ஆசைத்தம்பி அவர்கள் பேசுவார்.

### பெங்களூர்

27-11-55 ஞாயிறு மாலை 4—30 மணிக்கு, கெ. பி. புட்டண்ண செட்டி டவுன் ஹாலில், மாநில மாநாட்டு நிதிக்காக சிறப்புச் சொற்பொழிவு நடைபெறும். தோழர் எஸ். வி. பதி அவர்கள் தலைமையில், ஆசிரியர் மு. கருணுநிதி, தோழர்கள் முல்லை-சத்தி, கலச சத்தியநாராயணு—ஆகியோர் பேசுவர்.
[கட்டணம்; ரூ 1, அணு 8]

### புதுச்சேரி

27—11—55 ஞாயிறு மாலை 6—மணிக்கு ஒதியஞ்சாலைத்திடலில் அறிஞர் அண்ணு, பொதுச் செயலாளர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் — இருவருக்கும் புதுவை தி. மு. கழக வட்டக்குழு சார்பில் வரவேற்பு அளிக்கப்படும்.

# தேன் துளிகள்!

**முல்லை சக்தி**

நாளை காலை கிழக்கு வானத்தில் கதிரவன் தோன்றியதும் இந்த காராக்கிரகத்தின் கதவுகள் திறக்கப்படும். இரண்டு ஆண்டுகள்—என் வாழ்வு மலரின் இரண்டு இதழ்கள் இருட்சிறையிலே சருகாகிவிட்டன. இன்பவானில் நீந்தி, இன்மொழியாள் ஒருவளின் புன்னகையைப் பரிசாகப் பெற வேண்டிய பருவத்தில், துருப்பிடித்துப்போன இரும்புக் கம்பிகளை எண்ண வேண்டிய துர்பாக்கிய நிலை எனக்கு ஏற்பட்டுவிட்டது. நான் என்ன கொள்ளை அடித்தேனா? குடித்துவிட்டு ஊரை வலம் வந்தேனா? இல்லை; இல்லை! செல்வச் சீமானின் சதியால்—கோல்கொண்ட அதிகார வர்க்கத்தின் அடக்கு முறையால் அடைக்கப் பட்டேன் சிறைச் சாலையில். சந்தர்ப்பமும் சூழ் நிலையும் எனக்கு எதிராக இருந்தன. பணமும், படாடோப வாழ்வும்—அந்தஸ்தும், அதிகாரமும்—என்னை இந்தச் சிறைக் கூடத்திலே தள்ளியது. ஏழை நான். யார் எனக்காக பரிந்து பேச முன் வருவார்கள்! சோலையூர் மிராசுதார் குமாருக்கு எதிராக எனக்கு உதவி செய்ய முடியுமா? செய்து தப்பத்தான் இயலுமா? தகதகவென ஜொலிக்கும் தங்கத் தாமரை போன்ற என் தங்கையின் வாழ்வைப் பாதுகாக்க நான் முற்பட்டது குற்றமாம்! என் உடன் பிறந்தாளின் உடலை விலை பேசிய வீணனை எதிர்த்தது குற்றமாம்! சட்டம், சீமானின் இரும்புப் பெட்டியிடம் மண்டி இட்டது. இரண்டு ஆண்டுகள் இருண்ட உலகத்திலே கழித்து விட்டேன். இந்த இரண்டு ஆண்டு சிறைவாசம் என் இருதயத்தை இரும்பாக்கி விட்டிருக்கிறது.

நாளை காலை நான் விடுபடுவேன்; கூண்டில் அடைபட்டிருந்த கிளி கதவுகள் திறக்கப்பட்டதும் சீறிப் பறப்பதுபோல பறப்பேன். என்னை சிறைச் சாலையில் தள்ளிய உள்ளமில்லாக் கள்ளனை — என் தங்கையின்வாழ்வைச் சூறையாடியக் கொடியவனை—பழிக்குப் பழி வாங்க வேண்டும். மீண்டும் இந்தக் கூண்டிலே அடைக்கப்பட நேர்ந்தாலும், தூக்கு மேடையிலே என் உடல் ஊசலாட நேரிட்டாலும், எங்கள் வாழ்வைப் பாழாக்கிய பழிகாரனை அழிக்காமல் விடப் போவதில்லை. ஜொலிக்கும் வைரம் போன்ற என் தங்கையின் வாழ்வு ஜோதி அணைந்து விட்டது. அவள் என்ன ஆனாளோ? எங்கு சென்றாளோ? வாழ்வைப் பறிகொடுத்த அவள், அவனியில் எப்படித் தலை தூக்கி நடக்க முடியும்? ஒரு முழக் கயிறு—ஒரு துளி விஷம்—ஆறோ, குளமோ—இவற்றில் ஏதேனும் ஒன்றின் உதவியைத்தான் தேடியிருப்பாள் என் உடல் பிறந்தாள்.

குமாரி! உன் குறு குறுத்தக் கண்களை இனி என்று காணப் போகிறேன்? 'அண்ணா' என்று நீ அழைக்கும் அந்த மழலை மொழியை என்று கேட்பேன்? தாய் தந்தையை இழந்த உன்னை சீராட்டி—பாலூட்டி - தாலாட்டி வளர்த்தேன். பூனை கையில் சிக்கிய கிளியாகி விட்டது உன் வாழ்வு. என் குலக்கொடி பூத்துக் குலுங்கும் என்று கனவு கண்டேன். என் கனவெல்லாம் கனவாகவே போய் விட்டது. குமாரி! உன் இதயத்தில் குடியேறியவனை கை பிடித்து வலம் வர வேண்டும்; நான் வாழ்த்த வேண்டும்—என்று எண்ணிய எண்ணமெல்லாம் மண்ணாகிப் போய் விட்டதே! உன் வாழ்வைக் கருக்கிச் சென்றவன், செகத்தில் எந்த மூலையில் இருந்தாலும், என் கூரிய வாளால் கொத்தாமல் இருக்கப் போவதில்லை! இனி எனக்கு யார் இருக்கிறார்கள் இந் நீள் வையகத்தில்? எனக்கு இருந்த ஒரே துணை—ஒரே ஆதரவு—நீதானே? நீயே போன பின் நான் எதற்காக வாழ வேண்டும்?

அன்றிரவு—நீ கதறிக் கண்ணீர் வடித்தாயே, அந்தக் காட்சி அழியவில்லை; என் இதயத்தில் ஆழமாகப் பதிந்து விட்டது. நீ சிந்திய கண்ணீர், என் சிந்தையை சூடேற்றிவிட்டது. உன் மேகக் கண்கள் கொட்டிய மழை மறையவில்லை என் மனதில். உன் அழுகுரல் — ஒப்பாரி—என் காதிலே ஒலித்துக் கொண்டேதான் இருக்கிறது. எப்படி மறக்க முடியும், என் மாணிக்கமே!

★

அன்றிரவு அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்த என்னை, விக்கி விக்கி அழுத ஒரு குரல் எழுப்பியது. அந்த நடுநிசியில்—உலகமே உறக்கம் என்ற போர்வையில் புதைந்து கொண்டிருக்கும் வேளையில்—அழும் அபாக்கியவதி யார் என எண்ணமிடலானேன். உன் அறையிலிருந்துதான் அக்குரல் வருகிறது என்பதை அறிந்து திடுக்கிட்டேன். நீ அழவேண்டிய காரணம் என்ன என்று ஆயிரம் கேள்விகள் என் உள்ளத்திலே எழுந்தது. தாழிடாமலிருந்த உன் அறையின் கதவுகளைத் திறந்தேன். பூங்கொடி போன்ற உன் உடலை புழுதியிலே புதைத்து, விம்மிவிம்மி அழுது கொண்டிருந்தாய். என் இதயம் வேதனையால் விம்மியது. நீ அழக்கூடாது என்பதற்காக எத்தனையோ இரவுகள் நான் கண்ணீர் சிந்தி உன்னை வளர்த்தேனே—என் வாழ்வு கலங்கினாலும், உன் கண்கள் கலங்கக் கூடாது என்ற சித்தாந்தத்தை இத்தனை நாள் காப்பாற்றி வந்த எனக்கு, அக்காட்சி வேதனை வேள்வியில் தள்ளியதில் வியப்பொன்றும் இல்லையே! உன்னுடைய விம்மல் என் இதயத்தை சம்மட்டியால் அடித்துக் கொண்டே யிருந்தது.

நான் உன் அருகில் அமர்ந்து, கார்மேகம் போன்ற உன் கூந்தலைக் கோதி, "குமாரி, என் தங்கமே!" என்றேன். துக்கம் என் தொண்டையை அடைத்தது. என்னை எதிர்பாராத நீ திடுக்கிட்டாய். பால்வடியும் உன் வதனத்தில் கண்ணீரருவி ஓடிக் கொண்டிருந்தது. அழுது அழுது உன் காந்தக் கண்கள் சிவந்திருந்தன. அலை அலையான உன் அழகிய கூந்தல் நிலை குலைந்திருந்தது. "பாசமுள்ள சகோதரி—நேச மிகுந்த என் செல்வமே! உன் வேல் விழி கள்நீரைக்கொட்டுவானேன்? வேல் கொண்டு தாக்குவதுபோல் வாட்டுகிறதுஉன் கண்ணீர். உன் குறையை சொல்லம்மா! நான் நிறைவேற்றுகிறேன். நான் இருக்கும்போது நீ ஏன் கண்ணீர் சிந்தவேண்டும்...?" —நானும் அழுதுகொண்டே பேசினேன்.

"அண்ணா" என்று நீ அலறி என் நெஞ்சிலே உன் முகத்தைப் புதைத்துக் கொண்டாய். உன் இதயத்தின் அடித்தளத்திலிருந்து புறப்பட்ட அந்த சோகத் தொனி என்னை உலுக்கியது. என் நெஞ்சை உன் கண்ணீரால் கழுவிக் கொண்டிருந்தாய். என் கண்களிலேயிருந்து கொட்டிய நீர்த் துளிகள் உன் கன்னத்தில் முத்து முத்தாக விழுந்தன.

"குமாரி! குலவிளக்கே! அழாதே! என்ன நேர்ந்து விட்டது உனக்கு? உன் இதயத்தைத் திறந்து பேசம்மா. உன் சோகத்தை நான் துடைக்கிறேன். சொல்லம்மா..."

"அண்ணா! நான் எப்படிச் சொல்வேன்.........சீரழிந்துபோன என் கதையை தங்கக் குணம்படைத்த உங்களிடம் எப்படிக்கூறுவேன்... மாசு படிந்து விட்டது என் வாழ்வில்! மாசற்ற குடும்பத்தில் களங்கத்தை ஏற்படுத்தி விட்டாள் உங்கள் தங்கை! அல்லும், பகலும், அனவரதமும் கண்ணைக் காப்பதைப்போல என்னைக் காத்து வளர்த்தீர்கள். எனக்குத் தாயாக, தந்தையாக இருந்து வளர்த்த தங்கள் முகத்திலே கரிபூசிவிட்டாள் உங்கள் தங்கை!...அண்ணா! நான் தங்களின் தங்கையாகப் பிறக்க அருகதையற்றவள். நான் கேட்டதை எல்லாம் வாங்கிக் கொடுத்தீர்கள், என் முகம் வாடாமலிருக்க. அன்பை அள்ளி அள்ளி அளித்தீர்கள்; துன்பம் இன்னது என்றறியாமல் வளர்ந்தேன். அன்பு சொரிந்த தங்களை—உயிரையெல்லாம் என்மேல் வைத்திருக்கும் உங்களை—ஏமாற்றி விட்டேன், பித்த மனம் கொண்ட எத்தன் ஒருவன் மேல் கொண்ட ஆசையால்! பருவத்தின் மெருகில் பூரித்திருந்த என் உள்ளம், அந்தப் பொல்லாதவனின் பசப்பு வார்த்தையில் மயங்கியது. இளமையின் துடிப்பு—இதயத்தின் ஆசை—பருவக் கோளாறு—அத்தனையும் சேர்ந்து என்னை சதி செய்து விட்டது. என்னை மன்னியுங்கள் அண்ணா; என்னை மன்னித்து விடுங்கள்...

"குறைமதி கொண்டவனின் மேல் காதல் கொண்ட காரணத்தால் என் வாழ்வு சீரழிந்து விட்டது; சுக்கல் சுக்கலாகிவிட்டது. கசங்கிய மலராகிவிட்டேன்—திரிந்துபோன பாலாகிவிட்டது என் வாழ்வு. அழகு மொழிகளை அள்ளிவீசி—எழில் கொழிக்கும் முகத்தைக் காட்டி—கவிதை நடையிலே காதல் மொழி பேசி—செல்வத்தை, செல்வாக்கை, அந்தஸ்தை, ஆடம்பரத்தைக் காட்டி என் சிந்தையிலே குடி ஏறினான். அவனது வார்த்தை வர்ணஜாலங்களிலே என் மனதைப் பறிகொடுத்தேன். இன்று என் வாழ்வைப் பறிகொடுத்து விட்டு வாடுகிறேன். தேன் இழந்த மலராகிவிட்டேன். தேம்பித் தேம்பி அழுதாலும் திரும்பவா போகிறது? சுக்கல் சுக்கலாகி விட்ட என் வாழ்வுக் கண்ணாடி ஒட்டவா போகிறது? தகாத செயல் செய்துவிட்ட தங்கள் தங்கை இனி வாழ முடியாதவள். வாழக் கூடாதவள். என்னை மன்னித்து விடுங்கள்......மாநிலத்தில் எங்கேயாவது ஒரு மூலையில் என் முகத்தை மறைத்துக்கொள்ளுகிறேன். சல சல வென்று சிந்து பாடி ஓடிக்கொண்டிருந்த நம் வாழ்வுக் குடும்பத்தில் ஒரு 'சுழி'யை உண்டாக்கி விட்டேன் நான். குடும்ப கௌரவத்தைக் கெடுத்த இந்தப் 'பாவி' இனி புவியில் வாழ அருகதையற்றவள். தங்கள் தங்கை என்று சொல்லி பெருமைப்பட்டு வந்த நான், தங்களைத் தலை குனியச் செய்து விட்டேன். வெட்கம், வேதனை என் உள்ளத்தை அணு அணுவாக எரிக்கிறது. அண்ணா........."—விக்கி விக்கிப் பேசி வந்த நீ, துக்கம் தொண்டையை அடைக்க நிறுத்தினாய். அருவிபோல் கண்ணீர் உன் கண்ணாடிக் கன்னங்களில் கோடிட்டுச் சென்றது. குதூகலம் கொப்பளிக்கும் உன்

★ தொடர்ச்சி 10-ம் பக்கம்

★'காதல் ஒரு தீச் சுடர்; அதில் சிக்கியவர்கள் விட்டில் பூச்சிகள்தான்' என்கிறாள், காதல் களத்திலே சோக முடிவைக் கண்ட பெண்ணொருத்தி—

★'என் குலக்கொடியின் கற்பு பறித்தான்; நான் அவன் உயிர் பறிப்பேன்' என்று சீறிப் பாய்கிறான் அந்தத் தங்கைக்கு அண்ணன்—

★இந்த மூவரையும் சுற்றிச் சுழலும் ஒரு வேதனைக் காவியத்தின் முடிவு...? கண்ணீரல்ல; இதய இன்பத்தின் தேன் துளிகளாம்!!...

# புதையல்

மு. கருணாநிதி

## 48. பலி, நிறைவேறியது!

**சென்ற இதழில்.....**

மாயாண்டிக் கிழவரும், அம்பலமும் சேர்ந்து-திருமணத்திற்கான திட்டங்களைத் தீட்டுகிறார்கள். அதன்படி திருமணம்—ஊர்வலம் முதலியன நடைபெறுகின்றன. இரவிலே ஒரு தெருக்கூத்து ஏற்பாடு. ஊர் மக்கள் அனைவரும் தெருக்கூத்திலே கூடியிருக்கும்போது, துரை-பரிமளா இருவரும் வெட்டி வீழ்த்தப்பட வேண்டும் என ஏற்பாடு. சோபன அறைக்கு துரையும், பரிமளாவும் அனுப்பப் படுகிறார்கள். எப்போது ஒருவரோடொருவர் பேச இயலும் எனக் காத்திருந்த இருவரும் தழுவிக் கொண்டு கணணீர் வடிக்கிறார்கள்...

ஏராளமான மக்கள் கூட்டத்திற்கிடையிலே தெருக்கூத்து ஆரம்பமாகியது. ஊர்ப் பெரிய மனிதர் என்ற முறையில் வெள்ளியம்பலம் தனியாக ஒரு சாய்வு நாற்காலியில் படுத்துக்கொண்டே தெருக்கூத்தை ரசித்துக்கொண்டிருந்தார். மகாபாரதம் — போர்க்கள நிகழ்ச்சிகளைப் பின்னணியாக வைத்து அபிமன்யு வதைப் படலம் என்ற கதையை நடத்திக் காண்பித்தார்கள். பாரதப் போர் ஆரம்பிப்பதற்கு முன்பு களப்பலி என்று ஒரு பலி கொடுக்க வேண்டும்; அதற்கு யாரைத் தேர்ந்தெடுக்கலாம் என்று யோசனைசெய்து, கடைசியில் பீமனுடைய மகன் அரவான் என்றபெரும் வீரனைக் களப்பலி கொடுக்கிற கட்டம்—மக்கள் ஒரே ஆர்வத்தோடு ரசித்துக் கொண்டிருந்தனர். அம்பலத்திற்கு அங்கே புத்தி செல்லுமா; என்ன! அவருடைய நினைவு எப்போது மணி பனிரெண்டாகும் — தம்பதிகளின் தலையை நறுக்கலாம் — ரத்தத்தைக் கிணற்றிலே எப்படித் தெளிக்கலாம்—என்பவைகளைப் பற்றியே சுழன்று கொண்டிருந்தது.

பக்கத்திலே பயபக்தி மரியாதையோடு உட்கார்ந்திருந்த ராமனைக் கூப்பிட்டு, காதிலே ரகசியம் ஏதோ பேசினார். அதற்கு அவன் பதில் சொல்லும்போது கொஞ்சம் பலமாகவே, "அதெல்லாம் வீட்டைச் சுற்றி காவல் இருக்குங்க! பயப்படாதிங்க-எங்கயும் ஓட முடியாது!'' என்று கத்தினான்.

அம்பலம், அவன் காதைப் பிடித்துத் திருகி, 'சத்தம் போடாதே' என்று எச்சரித்துவிட்டு, மீண்டும் ஏதோ அவன் காதுக்குள்ளே சொல்லி, அவனை அங்கிருந்து அனுப்பிவைத்தார். ராமனும் தெருக்கூத்தை விட்டுப் பிரிய மனமில்லாமல் பிரிந்தான்.

தெருக்கூத்திலே அரவான் களப்பலிக்கான ஆயத்தங்கள் நடக்கும் கட்டம் ஆரம்பமாகிறது. பாரத யுத்தம் நடந்தால் தான் பூமி பாரம் குறையும் — பூமாதேவிக்கு தலைவலி கொஞ்சம் நீங்கும் — பூமாதேவியின் தலைக் கனத்தைக் குறைப்பதற்காகவே பாரத யுத்தத்தை ஏற்பாடு செய்து—பச்சைக் குழந்தைகள், பருவ மங்கைகள், பழம் நிகர் பெற்றோர்கள், அனைவரையும் விட்டு அவர்கள் வீட்டுப் போர்வீரர்கள் மாண்டு மடியும்படி செய்யப் போகிறேன் — என்பதாக கிருஷ்ண வேடதாரி வசனமும் பாட்டும் கலந்து திரௌபதியிடம் தனியாகப் பாடிக் கொண்டிருந்தான். பாட்டு முடிந்ததும் அடுத்தக் காட்சியாக அரவானை இழுத்துவந்து அவன் தலையை வெட்டி களப்பலி கொடுத்தார்கள் பாண்டவர்கள்.

அந்தச் சமயத்திலே தெருக்கூத்து பார்த்துக்கொண்டிருந்த மக்களிடத்திலே பெரும் பரபரப்பு ஏற்பட்டது. அம்பலம் திடுக்கிட்டு எழுந்தார். 'இதோ நானும் களப்பலி கொடுத்துவிட்டேன்! களப்பலி கொடுத்துவிட்டேன்'' என்று பயங்கரச் சிரிப்பு சிரித்துக்கொண்டு, கோரமான முகத்துடனும், கையிலே ஒரு ரத்தம் படிந்த அரிவாளுடனும் தாண்டவன் கூத்தாடிக் கொண்டு வந்தார். அவரது ஆத்திரக் கூத்தைக் கண்டு அஞ்சி நடுங்கிய மக்கள் அவரெதிரே நிற்காமல் ஒதுங்கி நின்றனர். தாண்டவன் அம்பலத்திற்கு நேராகப் போனார். அம்பலத்திற்கும் பயந்தான். ஆனாலும் சமாளித்துக்கொண்டு அசையாமல் நின்றார். தாண்டவன மீண்டும் கத்தினார்—"ஹஹஹா! அடே அம்பலம்!... என்னை யாரும் ஒன்றும் செய்ய முடியாது'... இதோ பார், பட்டாக் கத்தி! பாரடா பார்—இதிலே படிந்திருக்கும் ரத்தத்தைப் பார்!... இது யாருடைய ரத்தம் தெரியுமா? தாண்டவனை அலட்சியப் படுத்தி — தான் தோன்றித் தனமாக நடத்தினாயே திருமணம்; அந்தத் தம்பதிகளின ரத்தம்!... தகப்பனுக்கு இஷ்டமில்லாமல், என்னமோ நீதான் பெற்ற தகப்பன் மாதிரி, என் பெண்ணுக்கு ஒரு அறைதைப் பயலைக் கட்டி வைத்தாயே; அந்தப் பயலின் பச்சை ரத்தமும், என் பசுங்கிளியின் பாச ரத்தமும் படிந்த கத்தியடா இது!...பார் பாவி பார்!... பரமபாதகா—ஊர்க் குடியைக் கெடுக்கும் சண்டாளா! உன்னை எதிர்க்க யாருமில்லை என்ற தைரியத்திலேதானே; பெற்றவர்களைத் துரும்பாக மதித்து—பெண்ணுக்கு மாப்பிள்ளை தேடினாய்; இதோ, உன்னை எதிர்த்து ஜெயித்துவிட்டேன்-மாதா பிதா இருவரையும் அலட்சியப் படுத்திய அந்த மானங்கெட்ட பெண்ணையும் பழிவாங்கி விட்டேன்—காலையிலே கல்யாணம்'... இரவிலே பிணம்! ஹஹஹ... வெள்ளியம்பலம்; தாண்டவன் தைரியத்தைப் பார்த்தாயா? .போய்ப் பார்! உன் ஆசீர்வாதமும்—பாதுகாப்பும் பெற்ற அபாக்யவதியும், அற்பப் பயலும் சவமாகப் படுத்திருக்கும் காட்சியைப் போய்ப் பார்! போடா போ!...''

தாண்டவனை, யாராலும் நிறுத்த முடியவில்லை. யாராலும் தடுக்க முடியவில்லை. வெறி கொண்டவனைப் போல ஆடினார்.

வெள்ளியம்பலம், காதலர்களைப் பலிகொடுக்க கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார். இப்போதோ காரியமே முடிந்துவிட்டது என்று கேட்டு களிப்படையாமல் இருப்பாரா? ஆனாலும் மனதில் எழுந்த மகிழ்ச்சியை வெளியே

காட்டிக்கொள்ளாமல், "அ
பாவி! ஆசைக் காதலர்கள
கொன்றுவிட்டாயா? எனக்
அப்போதே தெரியும் — அ
காகத்தானே காலை முத
அவர்களுக்குக் காவல் போட்
வைத்திருந்தேன்...'' என்
அங்கலாய்த்துக் கொண்டா
தெருக் கூத்திலே தொடர்
இல்லை—ஊரார் திகைத்
நினறனர்-தாண்டவனோ வெ
ருக்கேற்றபடி தாண்டவ
டிக் கொண்டிருந்தார். என்
செய்வதென்று யோசித்
கொண்டிருந்தவரின் கண்
லே ராமன் பட்டான். உட
அம்பலம்ஊர்மக்களைத் தூண்
விட்டு, தாண்டவனைப் பிடி
நிறுத்துமாறு கூறினார். அம்
மும் தாண்டவனை எதிர்த்
ஊரார் சூழ்ந்துவிட்ட காரண
தால் தாண்டவன் அடங்கி,
யிலேயுள்ள கத்தியை எறி
விட்டு நின்றார். இதுத
சமயமென்று ஊரார் தாண்
வனைக் கட்டிப்போட்டார்
விஷயந் தெரிந்த தாண்
னின் மனைவி அஞ்சலை ஓடோ
வந்தாள். கட்டுண்டு கிடக்
தாண்டவன் மீது விழுந்
''அடப்பாவி! என்மகளை அ
யமாகக் கொன்று விட்
டேயே!'' என்று அலறி
மயங்கி விழுந்தாள்.

இதுதான சமயமெ
அம்பலம், ராமன் வந்த
மாக நழுவினார். ராமன், எ
லே ஒரு பாத்திரத்து
வந்து கொண்டிருந்தான்.
திரத்தைப் பிடித்திருந்த அ
கரங்கள் நடுங்கிக் கொண்
தன. அம்பலம் அவனிடம்
வந்து, "ராமா! என்ன இ
என்று பரபரப்போடு
டார்.

ராமன், குரல் நடுங்கியவ
"எஜமான்! நமக்கு மு
டியே, தாண்டவன் கா
தை முடித்து விட்டா
என்றான்.

''அது தெரியுமடா என
இருவரும் செத்தே விட்
களா?'' என்றார் அம்பலம்.

"துண்டடிா விட்டான்
மான், துண்டாடி விட்டா

என்று கண்ணீர் வடித்தான் ராமன்.

"சபாஷ்!... இது என்ன?" என்று பாத்திரத்தைப் பார்த்தார்.

"இது அவர்கள் இருவருடைய ரத்தம்—அய்யோ! இரண்டு பேர் கழுத்திலே இருந்தும் நீர் ஊற்று மாதிரி ரததம் குபுகுபுன்னு கொட்டுதுங்க! பாக்க சகிக்கிலீங்க!...கட்டில் அறையிலே, இருவரும் ஒருத்தரோட ஒருத்தர் சந்தோஷமாக முத்தம் கொடுத்துக் கொள்ளும்போது, இரண்டுபேர் தலையையும் பனங்காய் மாதிரி சீவிட்டான் பாபிப்பயல்!"

"அதிருக்கட்டுமடா! இதை ஏன் இங்கு எடுத்துக் கொண்டு வந்தாய்?"

"மாயாண்டிக் கிழவர்தான் சொன்னர். அதன்படி எடுத்து வந்தேன் கொஞ்ச நேரமானல் ரத்தம் உறைந்துவிடும். பிறகு தெளிக்க முடியாது! இப்போதே உங்களையும் அழைச்சிகிட்டு கிணற்றங்கரைக்கு வரும்படி அவர்தான் சொன்னர். அவர், ஆட்களையெல்லாம அழைத்துக் கொண்டு, புதையல் எடுப்பதற்குத் தோதா அங்கே யிருப்பதாகவும் சொன்னர், எஜமான்!"

'அப்படியா? வாபோவோம்!' என்று ராமனுடன் அம்பலம், கிணற்றடி நோக்கிப் புறப்பட்டார்.

ரத்தக் கிண்ணத்துடன் ராமன், நடுங்கியவாறு அவர் பின்னே போய்க் கொண்டிருந்தான். கிணற்றடியிலே ராமன் சொன்னவாறு, அம்பலத்தின் ஆட்கள் நின்று கொண்டிருந்தார்கள். அம்பலம் அவர்களைப் பார்த்து, 'மாயாண்டி எங்கே?' என்று கேட்டார்.

"இதோ வந்து விட்டேன். ஜெயம்! ஜெயம்!!" என்று மகிழ்ச்சியோடு கத்தியபடி மாயாண்டி அங்கு வந்து, அம்பலத்தின் அருகாமையிலே நின்றூர்.

"பார்த்தீரா கிழவரே! நாம் செய்ய வேண்டிய காரியத்தை அந்தத் தாண்டவனே செய்து விட்டான்!" என்று சிரித்தார் அம்பலம்.

"ஆமாம்!" என்று தலையசைத்தவாறு, மாயாண்டி ராமனின் கையிலேயிருந்த பாத்திரத்தைப் பார்த்தார். அவரது முகத்திலே மாறுதல்!

அதைக் கவனித்த அம்பலம், "என்னய்யா; உம் இருதயத்தில் இரக்கம் வந்து புகுந்து கொண்டதோ, இந்த ராமன் பயலைப் போல!" என்று சிரித்தபடி கேட்டார் அம்பலம். இல்லை; இல்லை! என்ன இருந்தாலும், என்னேடு சிறிது நாளாவது பழகியிருக்கிருன்-பாவம்; இந்த துரை!" என்றவாறு, மாயாண்டி கண்களைத் துடைத்துக் கொண்டார். அவர் தேகம் ஏனே பதறியது!

"உலகத்திலே எந்தக் காதலருக்கும் ஏற்பட முடியாதமுடிவு இது! அம்பிகாபதி அமராவதி கூட இப்படிச் செத்ததாகக் கதை இல்லை. இருவரின் ரத்தமும், ஒரே பாத்திரத்தில்! உண்மைக் காதலர்களுக்கு இது பூரிப்பான முடிவு! இந்தமாதிரி ஒரு புண்யம் நமக்குக் கிடைக்கப்போவதால்தான், இவர்களைக் கொலை செய்த பாவத்திலிருந்து நமக்கு விடுதலை கிடைக்குமென நம்புகிறேன்"—கிழவர் கலங்கியவாறு இப்படிப் பேசினூர்.

'கொலை பண்ணிய பாவம் நமக்கு ஏனய்யா வருகிறது? அதுதான் தாண்டவனைச் சேரப் போகிறதே!" என்று கேலி பேசிவிட்டு, "ஆகவேண்டிய காரியத்தைப் பார்ப்போம்" என்று அவசரப் படுத்தினூர் அம்பலம்.

"ஆகவேண்டியதென்ன, தெளிக்க வேண்டியதுதான்" என்று, ராமனிடமுள்ள பாத்திரத்தை வாங்கி, அம்பலத்திடம் கொடுத்தார் மாயாண்டி.

அம்பலம், தன் ஆட்களைப் பார்த்து, "டேய்!—இதை நான் கிணற்றிலே தெளித்ததும், படீரென புதையல் வெடித்துக் கிளம்பும்—எல்லா பசங்களும் ஜாக்கிரதையா இருங்கள்!", என்று கூறியவாறு, பாத்திரத்திலுள்ள ரத்தத்தை அள்ளி கிணற்றிலே தெளித்தார்.

அவர் எதிர்பார்த்தபடி திடீரென எதுவும் வெடித்துக் கிளம்பவில்லை. பாத்திரத்திலுள்ளது முழுவதையும் கிணற்றிலே ஊற்றினூர். எதிரொலி எதுவுமில்லை.. மாயாண்டியைப் பார்த்தார், அவசரப்படாதீர்கள் என்பதுபோல் மாயாண்டி தலையை அசைத்தார். அம்பலம் மெதுவாக—ஆவலுடன் கிணற்றுக்குள்ளே எட்டிப்பார்த்தார். தகதக வென ஏதோ மின்னிக் கொண்டிருந்தது. அம்பலத்தின் கண்கள் விரிந்தன. எல்லோரையும் பார்க்கச் சொன்னூர்.

'டார்ச்' விளக்கை கிணற்றுக்குள்ளே அடித்தனர். பளபள வென மின்னும் பெரிய பெட்டிதான் அது! எல்லோரும் ஆவலோடு கிணற்றுக்குள்ளே பார்த்தபடி இருந்தனர்.

"என்ன செய்யலாம் மாயாண்டி?" எனக் கேட்டார் அம்பலம்.

"இப்போதுதான் நாம் எதிர் பார்த்தது புறப்பட ஆரம்பித்திருக்கிறது—இதை எடுத்தால் அடுத்தது வரும் என நினைக்கிறேன்." என்றூர் மாயாண்டி மகிழ்ச்சியுடன்!

அம்பலம், ஆட்களுக்குக் கட்டளையிட்டார். நாலைந்து பேர் கிணற்றுக்குள்ளே இறங்கினர். இறங்கியவர்கள், "வெள்ளிப் பெட்டி! வெள்ளிப் பெட்டி!" எனக் கத்தினூர்கள்: அம்பலமும் மற்றவர்களும், கண்ணை இமைக்காமல், திறந்த வாய் மூடாமல், கிணற்றுக்குள்ளே பார்த்துக் கொண்டேயிருந்தனர். பெட்டியை மெதுவாகத் தூக்கி, மேலேயிருந்து அனுப்பப்பட்ட கயிற்றிலே கட்டி விட்டார்கள். அம்பலமும் மற்றவர்களும் பெட்டியை கிணற்றங் கரையிலே வைத்தனர். அம்பலம், தாங்காத ஆர்வத்தோடு, பெட்டியைத் தடவிப் பார்த்தார். ஆட்கள் கூறியபடி அது வெள்ளிப் பெட்டியல்ல—ஈயமாக இருக்க வேண்டும். அல்லது வேறு ஏதாவது உலோகமாக இருக்க வேண்டும். அதைப் பற்றியெல்லாம் அவர் கவலைப்படவேயில்லை. உள்ளேயிருப்பது பற்றித்தான் அவருக்குக் கவலையெல்லாம். பெட்டியைக் கஷ்டப்பட்டுத் திறந்தார். உள்ளே இன்னெரு பெட்டி இருந்தது. அதைத் திறந்தார். அதற்குள்ளே இன்னெரு பெட்டியும்—"இதையும் திற-புதையல் காண்பாய்!" என்ற எழுத்துக்களும் காணப்பட்டன. அம்பலத்தின் ஆனந்தத்திற்கு எல்லையில்லை, அவசர அவசரமாக மூன்ருவது பெட்டியையும் திறந்தார். அதிலே ஒரு வேலைப்பாடமைந்த ஓலையிருந்தது. அந்த ஓலையை எடுத்துப் பார்த்தார். அம்பலத்தின் முகம் திடீரென மாறியது! பாத்திரத்திலே மிச்சம் ஒட்டிக் கொண்டிருந்த ரத்தத்தின் சிகப்பையும் தோற்கடிக்கிற விதத்திலே அவரது முகமும், கண்களும் சிவந்தன. ஓலையிலே காணப்பட்ட எழுத்துக்களை திரும்பவும் படித்தார், கண்களைக் கசக்கிக் கொண்டு! அதிலே இருந்த வாசகம் இது தான்!

**"மனிதனே! பொன்னைத் தேடி அலையாதே! முதலில் உன் மனதையே பொன்னுக்கிக் கொள்!"**

அம்பலத்திறைல் அங்கு நிற்கவே முடியவல்லை! "எங்கே அந்த மாயாண்டிக் கிழவன்? என்னை ஏமாற்றி விட்டான்! உடனே அவனைக் கொல்லுங்கள்!" என்று கத்தினூர் அம்பலம்.

எல்லோருமே "மாயாண்டி எங்கே?" என்று பார்த்தனர். மாயாண்டி, அங்கே இல்லை; எங்கேயோ போய் விட்டார். போய் விட்டாரா; அல்லது அவரும் அம்பலத்தோடு சேர்ந்து ஏமாந்து போய்—இனி நின்ருல் கொன்று விடுவார்கள் என்ற பயத்தில் ஓடி விட்டாரா?-இப்படி ஒருகேள்வி அங்கிருந்தவர்கள் உள்ளங்களிலே எழுந்தது. [வளரும்]



## அதிசயம்; ஆனால் நடந்திருக்கிறது!

சென்னை-6
12—11—55

..ர் அவர்களுக்கு,

..பத்தில், பெரியார் ஈ.வே.ரா. ..களுக்கென, சென்னை ..ட்ரோடில் உள்ள பிரபல ..ட்டார் கம்பெனி ஒன்றில் ..மோட்டார் வாங்கப்பட்டது. ..பொருப்பாளர் தோழர் 'குத் ..' அவர்களால்.

..கார் வாங்கப்பட்டது' என்ற ..திதான் வெளியில் தெரிந்ததே .. அப்படிக் கார் வாங்கிய ..றையிலே நடைபெற்ற ஒரு ..னைச் சம்பவம் வெளியாக ..லை.

அந்தக் கம்பெனியில் விற்பனை ..ர்களாக பல தமிழர்கள் ..தும், மோட்டார் என்னவோ, ..ஆரிய இன விற்பனையாளர் ..ம் வாங்கப்பட்டிருக்கிறது. ..ல் என்ன நஷ்டமென்று ..கலாம். விற்பனையாளர்மூலம் ..ங்குவதால், கம்பெனியார் ..த விற்பனையாளருக்கு 'கமி ..' கொடுப்பார்கள். அந்தக் ..ஷன்' தொகை பல தமிழர்கள் ..தும், வலுவிலே ஒரு ஆரிய ..க் கிடைக்க வழி செய்வா ..?

இது குத்தூசியாரின் கவனத் ..து வரவில்லையா?

..ச்சையாக ஆரியர்களை ..ர்த்து, "நடு வீதியிலே ஆரியர் .. அடித்தாலும் கேட்பதற்கு .. கிடையாது" என்று சொல் ..குத்தூசியார், முப்புரி நூல ..நல்லது செய்துவிட்டு, தமி ..ந நயவஞ்சகம் செய்ய ..?

—செல்வன்.

★

## மோசடி!

சத்திரப்பட்டி
8—11—55

..யர் அவர்களுக்கு,

..ழைப் பாட்டாளிகளின் நல் ..வே எங்கள் இலட்சியம்' .. சொல்லித் திரியும் பொதுவு ..த் தோழர்கள், அந்த இலட் ..த எந்த அளவுக்குச் செய ..றுகிறார்கள் என்பதற்கு ஒரு ..ரணம்:

..வில்லிப்புத்தூரில் கம்யூனிஸ்ட் ..நிதிக்காக 9-10-54 அன்று, ..னை மக்கள் கலா மன்றத்தா .. 'கண்ணின் மணிகள்' என்ற ..கம் நடத்தப்படும் என்று ..ர விளம்பரம் செய்து, பண ..லும் செய்தார்கள், டிக்கெட் ..னை மூலம். கால் வயிற்றுக் ..க்குக்கூட கதியற்று வீதியில் ..ம் 'இந்நாட்டு மன்னர்'கள், .. என்றதும், கடமை உணர்ந் ..களாக காசுகள் தந்தார்கள். ..க் காசுகள் ரூ. 3000 என்ற ..வுக்கும் உயர்ந்தது.

ஆனால் இதுநாள் வரை (ஒரு ..ண்டுக்கு மேலாகியும்) நாடகம் ..த்தப்படவில்லை; இனி நடத்து ..கவும் தெரியவில்லை; இது ..ர நடத்தாததற்குத்தகுந்தகார ..களும் காட்டப்படவில்லை. ..கெட் எடுத்த பொது மக்கள் ..த்தைத் திருப்பிக் கேட்டால், ..க்கும் அதற்கும் சம்பந்த ..' என்று ஒவ்வொருவரும் .. கழித்து விடுகிறார்கள். ..பறிந்த பொது மக்கள் 'பண மோசடி செய்து விட்டார்கள்' என்று கூறுவதில் என்ன தவறு இருக்கிறது! மாடென உழைத்து ஓடெனத் தேயும் தொழிலாளத் தோழர்களின் வியர்வைக் குளத்திலே நீந்தி விளையாட நினைக்கும் அத்தகையோரது செயலுக்கு வேறு என்னதான் பொருள்—அவர்களது 'வெகுஜன' கண்ணோட்டத்தில்?

அன்பன்,
வீ. குருசாமி

★




## காங்கிரஸ் எதற்கு?

கோவை
3—11—55

ஆசிரியர் அவர்களுக்கு,

உலக உத்தமர், காருண்ய சீலர், காந்தியவர்கள், இந்திய உபகண்டம் பரங்கியரின்பிடியிலிருந்து விடுதலை யடைந்ததும், தன்னுடைய சகாக்களைப் பார்த்து, "காங்கிரஸைக் கலைத்து விடுங்கள்; இனி இந்த நாட்டிற்கு அவசியமில்லை!" என்று சொன்னார். ஆனால், இந்தப் பாரத மாதாவின் புத்திரர்கள் அதனை நிராகரித்து விட்டார்கள். இப்பொழுது...?

மறைந்தார் மகாத்மா. யமுனைக் கரையில் உலக உத்தமரின் திரேகத்தை எரித்தனர்; அவரது உயிரற்ற தேகத்துடன், அவர் காங்கிரஸ்காரர்களுக்கு போதித்து வந்த கொள்கைகளையும் எரித்து விட்டனர். அதன் பலன், இன்று நாட்டில் "மக்களுக்காக காங்கிரஸ்" என்றிருந்த நிலை மாறி, "காங்கிரசுக்காக மக்கள்" என்ற நிலைமை ஏற்பட்டுவிட்டது. படித்தோருக்கும், திறமையுள்ளோருக்கும் பதவிகள் இல்லை. உறவினர்களுக்கும், தேர்தலில் (மக்களால் வேண்டாமென்று விரட்டப்பட்ட) தோற்றுப்போனவர்களுக்கும் பதவிகள் கிடைக்கின்றன. எங்கும் பஞ்சம் தாண்டவமாடுகிறது. பொதுமக்கள் வரிப்பணத்தில் கட்டப்படும் அணைக்கட்டுகளிலும் இதர தொழிற்சாலைகளிலும் தாராளமாக கையாடல்கள் நடைபெறுகின்றன.

மக்களின் வாழ்க்கைத் தரம் மண்குதிரையின் கதைதான். பாட்டாளியின் இதயக் குமுறலை இன்றைய காங்கிரஸ்காரர்கள் அறிய மாட்டார்கள். அதற்குப் பதில் செல்வந்தர்களின் வாழ்த்தொலியையும், இசைவாணிகளின் கச்சேரிகளையும்தான் கேட்கிறார்கள். ஏன் இந்த நிலை? இதன் முடிவு எப்படியிருக்கும்?

சி. கே. நடராசன்,
பொதுக் காரியதரிசி,
வணிக வைசிய சங்கம்.

★

## வெட்கம்-வேதனை!

சென்னை,
11—11—55

ஆசிரியர் அவர்களுக்கு,

மத்திய அரசாங்கத்தின் போக்கை நினைத்தால் வேதனையாகவும் இருக்கிறது; வெட்கமாகவும் இருக்கிறது. ரஷ்யப் பிரதமர் புல்கானின் சென்னை வரும்போது, தமிழில் வரவேற்பு கொடுக்கக் கூடாது; இந்தியில்தான் கொடுக்க வேண்டும் என்று உத்திரவு பிறப்பித்திருக்கிறதாம் டில்லி. தமிழகத்தினர் தங்கள் தாய்மொழியில் வரவேற்புக் கொடுக்கக் கூடாது என்றால், இதைவிட வடநாடு தென்னாட்டை அடிமைப்படுத்துகிறது என்பதற்கு என்ன ஆதாரம் வேண்டும்? இனியாகிலும் நாம் எதற்காக இந்தியை எதிர்த்தோம்; எதிர்க்கிறோம் என்பதை பொதுவுடைமைத் தோழர்கள் உணரட்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அன்பன்,
ரா. தங்கவேல்.




## அந்நாள் எந்நாளோ?

*அனுராதபுரம், சிலோன்.*
*10—11—55.*

அன்புள்ள ஆசிரியருக்கு,

*இலங்கை வாழ் திராவிடன் எழுதிக்கொண்ட 'கண்ணீர்'க் கடிதம். சிங்களத்தின் விளிம்புக்கும் கோடிக்கரைக்கும் இடையில் எங்களைப் பிரித்து வைத்திருக்கும் இந்துமகா சமுத்திரத்தைப் பார்த்துப் பார்த்து ஏங்கி நிற்கும் வாலிபன் வரையும் மடல்.*

*...ஐயா; பாலை நிலத்தை சோலை வனமாக்க இலங்கை அழைத்துவரப்பட்ட நாங்கள், இன்று எங்கள் வாழ்வே வெங்கொடுமைக் காடாக ஆக்கப் பட்டது கண்டு கண்ணீர் விடாமல் என் செய்வது?*

*...தோட்டத்திலே மாடு போல் உழைத்து, முதலாளியிடம் கூலிக்குச் சென்றால், குறைந்த கூலிதான் கிடைக்கிறது. காரணம் கேட்டால், 'பட்டினிக்குப்பயந்துஓடிவந்த பராரிக்கு இது போகாதா?' என்ற பதிலும்—எதிர்த்துப் பேசினால், 'கள்ளத் தோணி' என்ற பட்டமும், அதைத் தொடர்ந்து சிறை வாழ்வும் கிடைக்கிறது.*

*...வெட்கமில்லாமல் சொல்லிக் கொள்ளுகிறார்கள், இந்தியா விடுதலைபெற்று எட்டு ஆண்டுகள் ஆகிவிட்டன என்று! இந்த எட்டு ஆண்டுகளில், கடல்கடந்த நாட்டில் வதைபட்டு வாழும்* **எட்டு பேருக்** *காவது நல்லது செய்திருக்கிறதா இந்திய சர்க்கார்? பாக்கிஸ்தான் அகதிகளுக்கு கோடி கோடியாகக் கொட்டிக்குவித்த டில்லி, அகதிகளை விடக் கேவலமான நிலையில் உழலும் நம் இனத்தவரை கவனியாதது ஏன்?*

*...இங்கு ஹை கமிஷனராக இருக்கும் சுகரவர்த்தி ஒரு வட இந்தியக்காரர். நூற்றுக்கு நூறு தோட்டத் தொழிலாளர்களான தமிழர்களைப் பற்றி அவர் ஏதும் அறியார்; தொழிலாளர்களிடம் நெருங்கிப் பழகும் பண்பை உணராதவர். அவர் மூலம் நலன்பெற முயற்சிப்பது எப்படி இயலும்?*

*...இப்படிக் கேள்விகள் கேட்டுக்கொண்டே, எங்கள் வாழ்வு வேள்வித் தீயிடைப் பட்ட சருகாகக் கருகி வருகிறது! ஆனாலும், இப்போது தான் நாங்கள் உணரத் தலைப் பட்டிருக்கிறோம், தனிநாடு கோரி திராவிடத்திலே எழும்பியிருக்கும் கிளர்ச்சி வெற்றி பெற்று, சென்னை கோட்டையிலே தி. மு. க.வின் இரு வர்ணக் கொடி பறக்கும் தினம் தான் எங்கள் அல்லல்களுக்கு விடுதலை தினமாகும்! அந்நாள் எந்நாளோ?*

*அன்பன்,*
ஏ. எம். எஸ். அன்புநேசன்.

## கடிதக் குறிப்புகள்.

தோழர் வி. சி. என். தம்பி (மோகனூர்) என்பவர், 'வறுமையை ஒழிக்க கடுமையாகஉழைக்க வேண்டும்' என்று அடிக்கடி கூறும் நேரு, உழைக்கத் தயாராக இருக்கும் லட்சக் கணக்கானோருக்கு உழைப்பதற்கானமார்க்கம் காட்ட-வேலைதர—முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டாமா?—என்று கேட்கிறார்.

★

தோழர் எம். எம். அன்பரசு (பம்பாய்-17) என்பவர் எழுதியுள்ள கடிதத்தில், மதராஸ் ராஜ்யம் என்ற பெயரை 'தமிழ் நாடு' என்று மாற்ற இப்போது அவசரமில்லை என்று பேசியிருக்கும் காமராசரிடம், 'கேரள' மாகாணம் பெற்ற மலையாளிகளிடமும், 'கன்னடம்' பெற்ற கன்னடியரிடமும் காணப்படுகிற மொழிப் பற்று காணப்படாதது வெட்கத்திற்குரியது என்று குறிப்பிடுகிறார்.

★

கலைவாணருக்குப் பொன்னாடை! [முகப்புப் படம்: திருமலை.]

# ★ வாழ்க, ★
# தென்னாட்டின் 'சார்லி'!



'கிந்தனார் காலட்சேபம்'—கீரல் விழுந்த சமுதாயத்தை நேர் செய்யும் பகுத்தறிவுப் படையல்!

தென்னகத்துக் கலையுலகில் நகைச்சுவை மன்னராய்த் திகழும் கலைவாணர் கிருஷ்ணன் அவர்களுக்கு, தென்னிந்திய நடிகர் சங்கத்தார் சென்ற 13-ம் தேதியன்று பொன்னாடை அணிவித்துக் கலையுலகின் சார்பிலே அவருக்கு நன்றி தெரிவித்துக் கொண்டார்கள். கலைவாணருக்குப் போர்த்திய பொன்னாடையின் மின்னிழைகளை எண்ணினாலும் எண்ணிவிடலாம்; அவர் தென்னகத்துக் கலையுலகிற்குச் செய்திருக்கும் நல்ல பணிகளை எண்ணிக் கணக்கிடுதல் இயலாது! எல்லா நகைச்சுவை நடிகர்களும் மக்களின் நெஞ்சிலே தேன் தடவினார்கள் என்றால், இவர் தேனோடு மருந்தும் கலந்து தடவினார் என்று கூறி அறிவியக்கம் பெருமைப் படுகிறது. சில நடிகர்கள், தாங்கள் கீழே விழுந்து நம்மை சிரிக்க வைப்பார்கள். இவரோ நம்மையே விழுந்து விழுந்து சிரிக்க வைத்து—சிரித்து அடங்கிய பிறகு சிந்திக்கவும் வைப்பார்.

சுயமரியாதைக் கொள்கை சுக்குபோல் கசக்கிறது; மிளகாயாய் உரைக்கிறது—என்று கூறிவிட்டு, நெஞ்சில் உரமும், நேர்மைத் திறனும் இல்லாமல் பலர் அஞ்சி ஒதுங்கியபோது, அஞ்சா நெஞ்சினராய் அவர் நம் கருத்துகளை திரையிலே முழங்கினார்.



தேனோடு மருந்தும் தந்தார்!

கலைவாணர் சமுதாயத்திலே பரவிவரும்தொத்து வியாதிகளைப் பற்றி விமர்சனம் செய்துவிட்டு தன்வழி நடக்கும் உபதேசியாக மட்டுமிருக்கவில்லை. அந்த வியாதி போக்க வகையான மருந்துகளையும், நோயாளியின் நோக்கமறிந்து பல விந்தைச் சுவை தரும் கனிகளுடன் குழைத்துக் குழைத்துக் கொடுத்திருக்கிறார்.

விதவைக்கு விவாகம்; கலப்பு மணம்; பொருந்தா மணம்—இவைபற்றியெல்லாம் அவர் தந்த எதிரொலி மாற்றாரின் கூடாரத்தையும் ஊடுருவிச் சென்று, மருட்சி போக்கி உண்மை விளக்கம் தந்திருக்கிறது.

அவர் கைபட்டு, மின்வெட்டாய் பிரகாசிக்காத சமுதாயப் பிரச்சினைகள் கிடையாது. அவர் சாடாத சந்தர்ப்பவாதக் கொள்கைகள் கிடையாது.

அவருடைய 'கிந்தனார் காலட்சேபம்'—கீரல் விழுந்த சமூகத்தை இலட்சியத் தீயிலே காட்டி, புது உரு கொடுத்து நேர் செய்யும் பகுத்தறிவுப் படையாக இருந்திருக்கிறது!

'வில்லுப் பாட்டுகள்' மூலம் சாக்கடைக் கொள்கைகளுக்கு அவர் தொடுத்த கணைகள் எதிரிகளும் மறக்க முடியாதத் தன்மை கொண்டவை!



நாடகத்தை நல்ல கருத்துக்கள் விளையும் தடாகமாக்கினர்!

அவர் நாடகத்தை நல்ல கருத்துகள்விளையும் தடாகமாக்கினார்! பொதுவுடைமைப் பூங்காவாம் ரஷ்யாவிற்குச் சென்று புது எண்ணங்கள் பெற்றார்!

—தமிழ் நாட்டிற்கு அவருடைய தொண்டு தன்னிகரற்றது!

எல்லோரிடத்தும் அன்பும், யாருக்கும் தலைவணங்காப் பண்பும் கொண்டு, வண்டுபோல பகுத்தறிவை மக்கள் மன்றத்தில் பரிமாறிய கலைவாணர் நம்மோடு கலந்துவிட்டவர்!

"கூடான இசைக் குருதி; துடிக்கும் தீர்க்கதரிசன வாக்குகள்; காந்த அதிர்ச்சி கொண்ட இதயத் தந்திகள்; இடிக்குமுழாம் போன்ற எண்ணங்கள்; வாட்களைப் போல் மாந்தர் உள்ளங்களை ஊடுருவி, கவனத்தை இழுக்கும் உற்சாகப் பண்கள்—இவற்றுடன் வேகச் சிறகடிக்கும் ஜீவனே!"—என்று லிவின்பர்ன் புரட்சிக் கவி விட்மனைப் பற்றிப் பாடினான்.

இந்தத் தென்னகத்துச் 'சார்லி'யை நினைக்கும்போதும் அந்த புகழுரைகள் நம் நினைவுக்கு வருகின்றன. கலைவாணர் என். எஸ். கே இருள்மண்டிக்கிடந்த நாடக, திரை அரங்கங்களில் ஒரு ஒளிவிளக்கு! ஒப்பற்ற வழிகாட்டி!

நாட்டுக்குப் பணி செய்யும் ஆர்வமும், நல்ல இதயமும்



பொதுவுடைமைப் பூங்காவாம் ரஷ்யா சென்று புது எண்ணங்கள் பெற்றார்!

கொண்ட நமது கலைவாணர் அவர்களை இன்னும் ஊக்குவிக்கும் முறையில் பொன்னாடை அணிவித்துகடமை உணர்வைக் காட்டிக் கொண்ட தென்னிந்திய நடிகர் சங்கத்தாரைப் பாராட்டுகிறோம்—வாழ்க நகைச்சுவை வேந்தர்!

★


திராவிட மாணவ முன்னேற்றக் கழக

## 2-வது மாநில மாநாடு

★

19-11-55 சனி காலை 8-30 மணிக்கு

சென்னை கோகலே மண்டபத்தில்

நடைபெறும்.

★

தலைவர்: கே. ஏ. மதியழகன்

திறப்பாளர்: இரா. நெடுஞ்செழியன்

பேசுவோர்: சி. என். அண்ணாதுரை

ஆகியோரும், மற்றும் திராவிட மாணவ மணிகளும்.

இசைச்செல்வி ஜி. கஸ்தூரியின் இன்னிசையுடன் துவங்கும்

★

நன்கொடை: ரூ. 1, அணா 8.

உ. பில்லப்பன்,
எல். லெனின்
து. தீ. தயாளன்
—செயலாளர்கள்

டி. கே. பொன்னுவேலு
—வரவேற்புக் குழுத் தலைவர்

## தேன் துளிகள்...

★ 5-ம் பக்கத் தொடர்ச்சி

கண்களிலே கங்கையையும், காவேரியையும் கண்டேன். உன் பசும் பொன் மேனி நடுங்கியது. நான் என் கரங்களால் தட்டிக் கொடுத்தேன்.

"குமாரி! மற்றவைகளையும் சொல்லி விடு..." என்று கர கரத்த குரலிலே கூறினேன்.

நீண்ட நேரத்திற்குப் பின்னுல் நீ பேச ஆரம்பித்தாய். "அண்ணு! எல்லாவற்றையும் சொல்லத்தான் போகிறேன். என்னை செல்லாக் காசாகிவிட்டு இன்று உல்லாச புரியில் சல்லாபம் செய்யும் சீமானின் பெயரையும் கூறத்தான் போகிறேன்...

"காதல் ஒரு பூச்செண்டு... மக்கள் என்ற வண்டுகள் அதில் மொய்க்காமல் இருப்பதில்லை! அதற்கு நான் மட்டும் விதி விலக்கல்லவே. நானும் காதல் கொண்டேன் ஒரு காதகன் மேல். கானல் நீரை நம்பி ஏமாந்தேன். காதல் ஒரு கானல் நீர்...தூரத்துப் பார்வைக்கு கண்ணைக் குளிரச் செய்யுமே தவிர, உபயோகத்திற்கு உதவுவதில்லை என்பதை அறியாமல் போய்விட்டேன். வானத்திலே வர்ண ஜாலம் காட்டும் வானவில்லைக் கண்டு ரசிக்கலாமே தவிர, அதை எப்படிப் பிடித்து விளையாட முடியும்? காதலும் அது போன்றதுதான். கவிஞர்களும் கதாசிரியர்களும், 'காதல்—காதல்—காதல் செய்வீர் செகத்தீரே! காதல் மக்கள் வாழ்விலே ஒளிவீசும் நிலவு—காதல் மக்கள் வாழ்வில் வீசும் வசந்தம்—காதல் மக்கள் வாழ்வில் வீசும் இளந் தென்றல்—என்றெல்லாம் அழகு மொழியில், கவிதை நடையில் வார்த்தைகளை வடித்தெடுத்து எழுதுகின்றார்கள். அவைகளை வானவில்லைக் கண்டு ரசிப்பது போல படித்துப் பரவசப் படலாம்—ரசிக்கலாம். ஆனால் வாழ்க்கையில் காதல் ஒரு தீச்சுடர்! அதில் சிக்கியவர்கள் விளக்கில் சிக்கிய விட்டில் பூச்சிகளாகிறார்கள். என் வாழ்வும்—என் கதியும்—அப்படியே ஆகிவிட்டது அண்ணு! காமத்தை மறைக்கும் பட்டுத் திரைதான் காதல் என்பது தெரியாமல் போய்விட்டது எனக்கு.

"கதைகளிலே, கவிதையிலே, படக் காட்சியிலே, நாடகத்திலே கண்ட காதல் என்னையும் பற்றிக் கொண்டது. கனவு காணும் பருவம் அல்லவா எனக்கு! ஒரு நாள்...படக் காட்சி சாலையிலே படம் பார்த்துக் கொண்டிருந்தேன். பக்கத்திலே இருந்த ஒருவர் என்னை முறைத்து முறைத்துப் பார்த்துக் கொண்டிருந்தார். அவரது அரும்பு மீசையும், அழகான முகமும், ஆடம்பரமான உடையும் என்னைக் கவர்ந்தது. எங்கள் கண்கள் மோதிக் கொண்டன. அன்று எதிர்பாராமல் சந்தித்த அந்த வாலிபர் என் வாழ்விலே நுறுக்கிட்டு கூறு கூறுக்கிவிட்டுப் போய்விட்டார்.

"நாட்கள் என்கிற இதழ்கள் உதிர உதிர, நாங்கள் நெருங்கிப் பழக ஆரம்பித்தோம். தேனை சுற்றும் வண்டைப் போல அவர் என்னை சுற்ற ஆரம்பித்தார். அவரது அந்தஸ்தைக் காட்டி, 'நம் காதல் ஈடேறுமா?' என்று கேட்டேன். "மண்ணிலே புதைந்துள்ள மாணிக்கத்தை மாளிகை வாசி உரிமையாக்கிக்கொள்வதில்லையா? குமாரி! என் இன்பமே! குடிசையிலே பிறந்த கோமேதகம் நீ. என் சிந்தையிலே குடியேறிவிட்டாய்... அந்தஸ்துக்கு அங்கே இடமே இல்லை. செம்பவழ இதழ்களும், ஆம்பல் பற்களும், கனவுக் கண்களும், செந்தாமரை முகமும், பளிங்கு மேனியும், கிளி மொழியும் என் உள்ளத்தில் அழித்தெழுதா சித்திரமாகப் பதிந்து விட்டது. காலமெல்லாம் உன் தளிர்க் கரங்கள் என்னைத் தழுவியபடியே யிருந்தால் போதும்; இவ் வையகத்தில் வேறு இன்பமே எனக்குத் தேவையில்லை. நிர்மலமான உன் நயனங்களைக் கண்டு கண்டு களித்து, என் காலத்தைக் கழித்து விடுவேன். நீல வானத்தில் நீந்தி வரும் நிலவுபோல, என்வாழ்க்கை வானில் நீந்தி வா, என் செல்வமே! கனிமொழியாளே! நீ மறுத்தால், அதோ ஓடுகிறதே கரைபுரண்டு காவேரி—அதிலே என் பிணம் மிதக்கும். கண்ணே! கன்னல் சாறே! 'சரி' என்று சொல் என் மின்னலே!......"—அவர் பேசிக் கொண்டே யிருந்தார். போதையூட்டும் காதல் மொழியிலே நான் மெய் மறந்தேன். அவருடைய அரவணைப்பில் சிக்கினேன்...வேறு என்ன அண்ணு நான் சொல்வது... சீரழிந்து விட்டது என் வாழ்வு!

"தேனை உண்ட வண்டு பின் மலரின் பக்கம் ஏன் திரும்பப்போகிறது? பலமுறை முயற்சித்தேன், அவனைச் சந்திக்க. சண்டாளன்—மறுத்து விட்டான். அவன் தந்த இன்பம் என் வயிற்றிலே வேதனையாக வளர்ந்தது. என் தொல்லை பொறுக்க முடியாமல் என்னை இன்றிரவு சந்தித்தான். கெஞ்சினேன்; அவனது ஈரமில்லா நெஞ்சு நெகிழவில்லை. 'வஞ்சித்து விட்டாயடா, பாவி' என்றேன்; கிஞ்சித்தும் அவன் கவலைகொள்ளவில்லை. காலில் விழுந்து கதறினேன்: கண்ணிரால் அவன் கால்களைக் கழுவினேன்; அவன் மனம் இளகவில்லை. நான் கதறக் கதற அவன் சிறினன்; ஆயிரம் ரூபாய் நோட்டுகளை எடுத்துக் கொடுத்து 'ஓடு' என்றான். அந்தப் பணக் கத்தையை அவன் முகத்திலே வீசி எறிந்தேன். அவன் போய் விட்டான்...என் வாழ்வும் போய் விட்டது. இனி என்ன செய்வேன் அண்ணு?"—அழுதுகொண்டே உன் சோகக் கதையை கூறிமுடித்தாய். உன் கதறல்—புலம்பல் என்னை சவுக்கால் அடித்தது.

உன் வாழ்வைப் பாழாக்கியவனை ஒழித்து விடுவதென்ற முடிவுக்குத் துரத்தப்பட்டேன் நான். "யார் அந்தக் கொடியவன்?" என்று கேட்டேன். என் குரலைக் கேட்டு நீ நடுநடுங்கினுய்.

"யார் அவன்?......"—மீண்டும் கேட்டேன். பயத்தால் மிரண்டபடியே "குமார்!" என்றாய்.

"குமார்! சோலையூர் பண்ணை மைனர்...?"

"ஆம்" என்று நீ கூறி முடிப்பதற்குள் நான் வெளியே போய் விட்டேன். "அண்ணு, அண்ணு!" என்று நீ கதறியது என் காதிலே விழுந்துகொண்டே யிருந்தது. என் எண்ணமெல்லாம் உன் கண்களைக் கலங்கச் செய்தவனை மண்ணுக்கி விடுவதிலேயே இருந்தது.

...ாரின் பங்களாவிலே நுழைந்...ன். அடர்ந்த செடி கொடிகள் சூழ்ந்து கொண்டிருந்ததால், நான் யார் கண்ணிலும் படாமல் உள்ளே நுழைய முடிந்தது. நாக்கமாக் கட்டிலிலே, வெல்வெட் விரிப்பின் மேல் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தான், அத்தச் சண்டாளன். என் கரங்களையே ஆயுதமாக்கி அவனது கழுத்தை நெரிக்க ஆரம்பித்தேன். அவன் போட்டக் கூச்சலிலே காவலாட்கள் வந்து என்னை கட்டிப் போட்டு விட்டார்கள். அவர்களின் சக்கு நுனிகளுக்கு சரியான வேட்டை! அவனது வாழ்வைப் பொசுக்க வந்தேன்; ஆனால் அவன் என் ரத்தத்தை ருசி பார்த்தான். "குமார்! என் குமாரியின் வாழ்வைப் பாழாக்கிய கொடியவனே! உன்னைக் கொல்லாமல் விடுவதில்லை. அன்றலர்ந்த தாமரை போன்ற என் தங்கையை பங்கப் படுத்திவிட்டாய். உன் அங்கமெல்லாம் துடி துடிக்க வைக்கப் போகிறேன். என் சகோதரியின் கண்ணிர் வெள்ளத்திலே நீ பிணமாக மிதக்க வேண்டும்! பழிகாரா, அழித்து விட்டாயடா, என் சித்திரப் பாவையை ......"—

நான் பேசிக் கொண்டே யிருந்தேன். போலிசும் உள்ளே நுழைந்தது...பண்ணையார் வீட்டிலே கொள்ளை அடிக்க வந்தேன் என்ற குற்றச்சாட்டு என்மேல் சுமத்தப் பட்டது! அதிகாரம் அந்த அக்ரமக்காரனின் ஆலிங்கனத்திலே அடைபட்டு விட்டது.

நீதிமன்றத்தில் என் குரலைக் கேட்க யாரும் தயாராக இல்லை. திருட்டுப்பட்டம் சூட்டி இரண்டு ஆண்டு சிறைவாசத்தைத் தீட்டி விட்டது சட்டம்! இரண்டு ஆண்டுகள் இந்த இருட் சிறையிலே உருண்டோடி விட்டன. ஆனாலும் அன்று என் மனதில் எழுந்த புயல் இன்னும் ஓயவில்லை. அன்புத் தங்கையே, நீ என்ன ஆனாயோ? உன்னை மீண்டும் காண்பேனா நான்?

★

பழைய நிகழ்ச்சிகள்—நிகழ்ச்சிகளா அவைகள்!—என் வாழ்வுப் பிரச்சினைகள்—என் உள்ளத்தில் வட்டமிட்டபடியே இருந்தன. இருள் மேகத்தை கிழித்துக் கொண்டு கதிரவன் கிளம்பினன். எப்போது என்னை வெளியே அனுப்புவார்கள் என்று என் நெஞ்சம் ஏங்கித் தவித்துக் கொண்டிருந்தது. ஒவ்வொரு விநாடியும் ஒவ்வொரு யுகமாகத் தோன்றியது எனக்கு. வழக்கமான சடங்குகளுக்குப் பின் காராக்கிரகத்தின் கதவுகள் திறந்தன.

இருளிலிருந்து ஒளிக்குவந்தேன். என் கால்கள்—குமாரின் மாளிகையை நோக்கித் தாளுகச் சென்றன. இம்முறை முன்போல் சிக்கக் கூடாது—சிக்கினலும் அவனது உயிரைக் குடித்துவிட வேண்டும் என்ற முடிவோடு சென்றேன். இடுப்பிலே கூரிய வாள்—இரவை எதிர் நோக்கி என் இருகிப்போன நெஞ்சு!...

மாளிகையை அடைந்தேன். அம்சதுளிகா மஞ்சத்தில் அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தான் குமார்! பக்கத்திலே ஒரு பாவை! அவனது கரங்கள் அவளை அணைத்துக் கொண்டிருந்தன. என் குமாரி இருக்க வேண்டிய இடத்திலே வேறு ஒருவள்...என் நெஞ்சம் ஆத்திரத்தால் துடித்தது.

கத்தியை எடுத்தேன். ஓங்கியபடியே அவனை நெருங்கினேன். இருட்டில் கட்டில் பக்கமிருந்த நாற்காலியின் மேல் மோதிக் கொண்டேன். "யாரது......?" என்ற குரல் என்னை திடுக்கிட வைத்தது. அடுத்த விநாடி அறை முழுதும் விளக்கொளி இருளை விரட்டி அடித்தது. நான் ஒரே பாய்ச்சலாக, அவன் மேல் பாய்ந்தேன். கத்தி அவன் நெஞ்சிலே பாய்வதற்குள், "ஐயோ அண்ணு! வேண்டாம்!" என்ற குரல் என்னை திடுக்கிடவைத்தது. குரல் வந்த திக்கை நோக்கினேன். மிரண்ட பார்வையோடு ஓடிவந்தவளை என் கண்கள் புரிந்து கொண்டன. "குமாரி......!" என்றேன். கதறினேன்.

"என்னை விதவையாக்கிவிடாதீர்கள், அண்ணு!" என்று என் கால்களைப் பிடித்துக் கொண்டாள், எதிர்பாராத இடத்திலே எதிர்பாராத நிலையிலே நான் கண்ட என் தங்கை! கத்தி நழுவி கீழே விழுந்தது. நான் கதவை நோக்கித் திரும்பினேன். என் கண்களிலே நீர்......! கண்ணிரா இல்லை; இல்லை; இதய இன்பத்தின் தேன் துளிகள்...!

★

## புல்கானின் பார்வைக்கு...

★ 2-ம் பக்கத் தொடர்ச்சி

மைதானத்திலே சிரிக்கக் கற்றுக் கொண்டு, அதை விமானக் கூடத்திலே நடத்திக் காட்டும் குழந்தைகளின் முகம் நிச்சயம் புல்கானினுக்கு உண்மையை உரைத்துவிடத் தவறாது.

'தினந் தினம் நீர் வந்து கொண்டிருந்தால் என்றைக்கும் நாங்கள் அழாமல் இருப்போமே!'—என்று கெஞ்சும் தோரணையில் அந்தப் பிஞ்சுகளின் முகம் தன்னைப்பார்ப்பதை புல்கானின் கட்டாயம் புரிந்து கொள்வார்!

அந்த முப்பதினுயிரம் குழந்தைகளும் வக்கீலின் தோரணையிலே இந்தப் பரத கண்டத்திலே பரட்டைத் தலையராய் உலவும் தங்கள் உடன்பிறந்தாருக்காக மௌனமாக வாதாடுவதைக் கண்டு, தேசிய வீரர்கள் வெட்கித் தலை குனியட்டும்!

மாஸ்கோ மாடலிலே இந்திய இராணுவம் அணிவகுத்துச் செல்வதைக் கண்டு, இந்த நடிப்புச் சுதேசிகளின் பகல் வேஷத்தை எண்ணி புல்கானின் ஓங்காரச் சிரிப்பு சிரிக்கட்டும்!

"இந்தியக் கம்யூனிஸ்ட்டுகளை மாஸ்கோ கூலிகள் என்கிறீர்களே! இப்போது நீங்கள் மட்டும் மாஸ்கோ பாணியை இரவல் வாங்கலாமா?" என்று அவர் அடுக்கடுக்காய் கேள்விகளை எழுப்பட்டும்!

— மாறன் எம். ஏ.

★

# பிறை வானம்

...பிள்ளைகள் பகுதி...



## துரோகியல்ல...

[ ஆரூர்—அமிர்தம் ]

கண்ணன் வெகு வேகமாகப் போய்க்கொண்டிருந்தான். நடைபாதையிலே நிற்கும் அவனது நண்பர்களைக் கூட பார்க்காமல் நடை போட்டுக் கொண்டிருந்தான். அவனது கண்களிலே கண்ணீர். ஆம்; அந்தக் கண்ணீர்தான் நண்பர்களைப் பார்க்க முடியாமல் செய்துவிட்டது போல் இருக்கிறது. கண்ணன் எங்கே இப்படி வேகமாகப்போய்க் கொண்டிருக்கிருன்? எதற்குப் போகிருன்? ஏன் அவன் அழவேண்டும்? அவன் கன்னமெல்லாம் சிவந்திருக்கக் காரணம்?

✶

பிறந்தவுடனேயே தாயை இழந்தவன் கண்ணன். தந்தை தாயாக இருந்து கண்ணனை பாதுகாத்தார். அத்தனைபாசம் அவன்மேல்! பாடுபட்டு உழைத்து, கிடைக்கும் பணத்தையெல்லாம் கண்ணனுக்கே செலவழித்தார். பள்ளியிலேயும் படிக்கவைத்தார். ஆண்டுகள் உருண்டு கொண்டிருந்தன; கண்ணனும் உயர் வகுப்புகளுக்கு சென்று கொண்டிருந்தான். கண்ணன் பள்ளியிலே முதல்வன்; நல்லவன்; நாலுபேர் புகழக்கூடியவன்; உபாத்தியாயர்களின் அன்பைப்பெற்றவன்; மற்ற மாணவர்கள் தன்னைக் கண்டு பொருமைப் படும் அளவுக்கு நடந்து கொள்பவன்.

கண்ணனின் தந்தை உடல்நிலை சரியில்லாத காரணத்தால் படுக்கையில் உடலை சாய்த்துவிட்டார். கண்ணனே சிறுவன். கையிலே பணம்-ஏன் சில்லரையே கிடையாது. தந்தை வெளியே சென்று பாடுபட்டால்தானே சில்லரை என்ற பலன் கிட்டும்! அவர்தான் படுக்கையில் கிடக்கிருரே! டாக்டர் சொல்லும் மருந்துகளைத் தன் வீட்டிலே கிடக்கும் சிறிய பொருள்களை விற்று வாங்கினுன். தந்தை தன்னை விட்டுப் பிரியாமல் இருக்க,வீட்டிலே உள்ளபொருள்களும் கரைந்தன. தந்தையும் அவனைவிட்டுப் பிரிந்து விட்டார். பாவம், கண்ணன் இப்போது தந்தையையும், தாயையும் இழந்து தனி மனிதனுகி விட்டான். அந்த ஊரிலே அவனுக்கு வேறு உறவினரே கிடையாது. அவன்தான் ஏழையாயிற்றே; உறவினர் எப்படி இருக்கமுடியும்?

பட்டங்கள் பல பெற வேண்டும் என எண்ணியிருந்த அவனுக்கு, பள்ளி வாழ்க்கைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுவிட்டது. பள்ளிக்குச் சென்று மாணவ நண்பர்களிடம் விடை பெற்றுக்கொண்டு ஊரை விட்டு எங்கேயாவது புறப்பட்டு விடுவோம் என்ற எண்ணத்துடன் பள்ளிக்குச் சென்ருன். நண்பர்கள் எல்லோரையும் கண்டு கண்ணீர் விட்டான். "தந்தையை இழந்த நான் பணமில்லா காரணத்தால் படிப்பை இழந்து உங்களையெல்லாம் விட்டுப்பிரிந்து இந்த ஊரை விட்டு வெளியேறுகிறேன் தோழர்களே" என்ருன். இல்லை; அழுதுகொண்டே சொன்னுன். மற்ற மாணவ நண்பர்களும் கண் கலங்கினர். அப்போது வகுப்பிலே நுழைந்த தலைமை ஆசிரியர் மாணவர்களுடைய நிலையைக் கொண்டு திடுக்கிட்டார். காரணம் கேட்டார். மாணவர்கள் தலைமை ஆசிரியரிடம், "தந்தையை இழந்த கண்ணன் பணமில்லை என்ற காரணத்தால் பள்ளி வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு நம்மிடம் விடைபெற வந்துள்ளான்" எனக் கூறினர். பிறகு அங்கு அமைதி நிலவியது. 'நம் வகுப்பில் முதல்வன்—பிற்காலத்தில் பட்டங்கள் பல பெற வேண்டியவன் படிப்பை இழப்பதா? ஏன் நாமே கைகொடுத்து உதவக் கூடாது? நமக்கு குழந்தையில்லா குறையும் அகலும்' என தலைமை ஆசிரியர் சிந்திக்கத் தொடங்கினர். அந்த சிந்தனைக்கு முடிவு கண்டவராய் கண்ணனுக்கும், மாணவர்களுக்கும் ஆறுதல்கூறி கண்ணனை தன்னிடம் அழைத்து, "இனி நீ என்னுடைய வீட்டிலேயே தங்கிப் படிக்கலாம், எனக் கூறினர். கண்ணன் ஆனந்தப்பட்டான். மாணவர்கள் தலைமை ஆசிரியரைப் பற்றி புகழ்ச்சியாகப் பேசத் தொடங்கினர்.

நாட்கள் ஓடின. அந்த நாட்கள் மாதங்களாக மாறி வருடங்களாகவும் உருண்டு போயிற்று. கண்ணன் படிப்பிலே சிரத்தை காட்டி, தலைமை ஆசிரியரின் மனம் கோணுமல் அவர் போக்குக்கு நடந்து, அவர் மகிழ்ச்சி அடைய நல்ல பிள்ளையாக நடந்து கொண்டான். கண்ணன் இப்போது பள்ளி இறுதி வகுப்பில் படிக்கிருன். இறுதி வகுப்பிலே முதல்வனுகத் தேறி, தன்னை ஆதரித்து தன் மகன் போல் நடத்துபவரை மகிழ வைக்க வேண்டும் என்ற எண்ணம் கண்ணனின் இதயத்திலே புகுந்தது. பாடுபட்டுப் படிக்க ஆரம்பித்தான், பலன் கிடைக்கும் என்ற எண்ணத்தில். பள்ளி இறுதி வகுப்பு மாணவர்களுக்கு நடைபெறுமே 'மாணவர் மன்றத் தேர்வு', அந்தத் தேர்வு இந்த வருடமும் வந்தது. தீபாவளி வந்து சென்றதால் தலைமை ஆசிரியரிடம் இருந்த பணமெல்லாம் செலவழிந்துவிட்டது. தேர்வுக்குப் பணம் செலுத்த வழியில்லாமல் தவித்தார். மற்றவர்களிடம் பணம் கேட்கலாம் என்ருல், தன்னைப்போல் தீபாவளிச் செலவைத்தான் குறிப்பிடுவார்கள்; பணம் தரமாட்டார்கள் என்பது தலைமை ஆசிரியருக்குத் தெரியும். தெரிந்தும் கேட்டார். அவர் நினைத்ததைத்தான் ஒவ்வொருவரும் பதிலாகக்கூறினர்கள். தலைமை ஆசிரியரிடம் பணமில்லை எனத் தெரிந்துகொண்ட கண்ணன் ஆசிரியருக்குத் தொந்திரவு தர வில்லை. ஆனுல் மன்றத் தேர்வு எழுதாமல் போகிறதே என்ற மன வருத்தத்தை அடைந்தான். பணம் கட்ட இருந்த நாட்கள் நாழிகையாக மாறிற்று. அதுவரை பணம் கிடைக்கவில்லை. கண்ணன் வீட்டில் ஒரு மூலையில் உட்கார்ந்து கொண்டு ஏதோ படித்துக் கொண்டிருந்தான். தலைமை ஆசிரியரோ ஏதோ சிந்தித்தவாறு அங்கும் இங்குமாக நடைபோட்டுக் கொண்டிருந்தார். கடைசியில் ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவராய் வீட்டை விட்டு வெளியே புறப்பட்டார். கண்ணன் அவர் திடீரென்று வெளியேறியதும் அவர் எங்கே செல்கிருர் என்பதைக் காண அவரைப் பின்தொடர ஆரம்பித்தான். தலைமை ஆசிரியர் தன் பள்ளிக்குத்தான் சென்ருர். பள்ளியிலே உள்ள தன் அறைக்குள் நுழைந்து, அவசர அவசரமாக பள்ளிப் பணப் பெட்டியைத் திறந்தார். பணப் பெட்டியைத் திறந்ததும் அவரது கைகள் படபடவென ஆட ஆரம்பித்தன. பணத்தை கையாலே தொட்டார். அவரது முகத்திலே வேர்வைத் துளிகள் படர்ந்தது. அப்படிப்பட்ட நிலையிலே பணத்தை எடுத்து சட்டைப் பையிலே சொருகப் போனுர். அதுவரை பொறுமையுடன் தலைமை ஆசிரியரின் செய்கைகளைப் பார்த்துக் கொண்டிருந்த கண்ணன், வேகமாக ஓடி 'கபக்' என பணத்தோடு சட்டைப் பையை நெருங்கிக் கொண்டிருந்த ஆசிரியரின் கையைப் பிடித்தான். பிடித்ததோடு நின்ருனு: "பாடுபட்டு உழைத்து பட்டினிக் கிடந்து பணம் கொடுத்து அனுப்பும் ஏழைகளின் பணத்தை ஏன் எடுக்கிறீர்கள்?"–என மடமடவெனப் பேசினுன்.

"எல்லாம் உனக்காகத்தான்" என்ருர் தலைமை ஆசிரியர். "எனக்காக தயவு செய்து எடுக்க வேண்டாம். ஏழைகளின் வயிற்றெரிச்சலை எனக்காகக் கிளப்ப வேண்டாம். குணசீலன் என்ற பெயர் போய் சுயநலவாதி என்ற பெயரை என்னை முன்னிட்டு ஏற்காதீர்கள்! தயவுசெய்து கேளுங்கள், நான் அந்தப்பணத்தை செலுத்தி தேர்வு எழுத மாட்டேன்" என துடிதுடித்துப் பேசினுன்.

"பேசாமல் இரு கண்ணு. நான் இந்தப் பள்ளிக்கு தலைமை ஆசிரியன். எது வேண்டுமானுலும் செய்வேன். இதைப்பற்றி என்னிடம் பேச உனக்கு உரிமையில்லை"—என்று கோபத்துடன் பேசினுர் ஆசிரியர்.

'உரிமையில்லை; வாஸ்தவம்தான். ஆனுல் எடுத்த பணத்தை பெட்டியில் வைக்கா விட்டால் உங்கள் கைகளை விலங்கு கவ்விக் கொள்ளும்' என தன்னையறியாமல் பேசினுன் கண்ணன்.

கோப வெறியிலே தலைமை ஆசிரியர் கண்ணனின் கன்னத்திலே கைவிரல்களைப்பதியவைத்து விட்டு அறையைவிட்டு வெளியேறினர். தன் வீட்டை நோக்கி நடை போட்டார்.

கண்ணன் தன் கன்னத்திலே அடிபட்டவுடன் ஒன்றும் புரியாத நிலையில் சிலை போல் நின்ருன் சில நிமிடங்கள். அவன் கண்களிலே கண்ணீர் ததும்பியது. பிறகு அவனும் அந்த அறையை விட்டு வெளியேறினுன்.

★

கண்ணன் எங்கோ வேகமாக நடைபோட ஆரம்பித்தான். இப்போது உங்களுக்கெல்லாம் தெரிந்திருக்கும் கண்ணன் எங்கேபோகிருன் என்று.

★

தலைமை ஆசிரியர் தன் வீட்டு வாசல் படிகளிலே காலை எடுத்து வைத்திருக்கமாட்டார்; அதற்குள் அவர் வீட்டு வாசற்படியருகில் கார் ஒன்று வந்துநின்றது. அதிலிருந்து பலர் குதித்தனர்; காக்கி உடை அணிந்து சிவப்புக் குல்லாயுடன்தான். தலைமை ஆசிரியர் திரும்பிப் பார்த்தார். பயம் அவர் இதயத்தைக்கவ்வியது.கண்ணிலே கண்ணீர் ததும்ப ஆரம்பித்தது. அவரை அறியாமலே அந்த காக்கி உடை — சிவப்பு தொப்பி அணிந்தவரிடம் கைகளை நீட்டினுர். அவரது கைகளிலே விலங்கு ஏறியது. வந்தவர்கள் அவருடன் காரிலே ஏறிக் கொண்டு கிளம்பினுர்கள். கார் செல்லும் வழியிலே கண்ணன் கண்களிலே கண்ணீருடன், சோகமான முகத்தோடு நடக்க முடியாதவனுக வந்து கொண்டிருந்தான். தலைமை ஆசிரியர் 'போலீஸ்'காரிலே வருவதைக் கண்டான் .அவ்வளவுதான்; 'அம்யோ' என்ற சத்தத்தோடு கீழே சாய்ந்து விட்டான்.

★

மறுபடி அவன் மூச்சை தெளிந்து எழுந்த நேரத்தில், சிறைக் கம்பிகளுக்கிடையே சிக்கிக் கிடந்தார் தலைமை ஆசிரியர்!

★


'முரசொலி'

இலங்கைத் தோழர்களுக்கு:

ஆண்டு சந்தா 6–0–0
6–மாத சந்தா 3–8–0

இலங்கை நேயர்களிடமிருந்து வி. பி. பி. மூலம் சந்தா தொகை பெற்றுக் கொள்ள இயலும்.

வெளிநாடு

ஆண்டு சந்தா 7–0–0
ஆறுமாத சந்தா 4–0–0

மலேயா நேயர்கள், சந்தா தொகைக்கு 'கிராஸ்' செய்த பிரிட்டிஷ் போஸ்டல் ஆர்டர்கள் அனுப்ப வேண்டுகிறோம்.

மூன்று மாத சந்தா கிடையாது.

# 'எழுத்தாணி'

இந்த வாரம் பரிசு பெறும் தோழர்:

(●) கார்மேகம்,
ஏழுகிணறு,
சென்னை—1.

போ. செல்லத்துரை;
திருக்காட்டுப்பள்ளி.

(?) முள் இல்லாத கடிகாரம் எப்படியிருக்கும்?

காந்தி இல்லாத காங்கிரஸ் போல இருக்கும்!

இ. சு. கருணாகரன்;
செம்பனார்கோவில்.

(?) உண்மையான மக்கள் ஆட்சி எப்போது மலரும்?

அது ஒரு அல்லிப் பூ; ஆணவமிலாறுகளின் தாபார் அஸ்தமித்த பிறகுதான் அது மலரும்!

சி. கே. நடராசன்; கோவை.

(?) காணாமலேயே நட்புகொண்ட கோப்பெருஞ் சோழனும், பிசிராந்தையாரும் வாழ்ந்த தமிழகத்தில் இன்று ஒருவரையொருவர் காணாமலேயே வசைபாடி நிற்கும் நிலையேற்பட்டிருக்கிறதே; இதைப் பற்றி என்ன நினைக்கிறீர்?

இதைச் சொல்ல வந்துவிட்டீரே; ஒருவரை யொருவர் கண்டு கொண்ட பிறகும் சிலர் வசை பாடத் தயங்குவதில்லையே—அதைப்பற்றி என்ன நினைப்பது!

தமிழ் அழகன்; திருப்பத்தூர்.

(?) நேருவின் கவனமெல்லாம் எங்கே இருக்கிறது?

வழுக்கைத் தலையை மறைக்க நாகரிகமாகக் குல்லாய் போடுவதில்!

மு. பரமசிவன்; அமைந்தகரை.

(?) விபீஷணர்களைப் பற்றியெல்லாம் கூறிய எழுத்தாணியாரே! இன்றைய அரசியல் வட்டாரத்தில் கும்பகர்ணன் யார்?

'கும்பகர்ணன்' ஒருவரல்ல; பலர் இருக்கிறார்கள் பார்லிமெண்ட் கட்டடத்தில்!

கா. ஐய்யாத்துரை; தேவர்குளம்.

(?) நேரு நடித்த படங்களில் புகழ் பெற்றது எது—அமெரிக்க விஜயமா? ரஷ்ய விஜயமா?

ரஷ்ய விஜயம்தான். ஏனெனில் இந்திரா காந்தியார் படம் முழுவதும் அவர் கூடவே இருந்தாரே!

கண்ணு இராசன்; ஒண்டிப்புதூர்.

(?) பசி வந்திடப் பத்தும் பறந்து போகும்—என்ற பழமொழியிலே வரும் 'பத்து' என்னென்ன?

இதை 'ஜனசக்தி'க்காரர்களிடம் கேளுங்கள்—வயிற்றுப் பிரச்சினைகளும், வயிற்றெரிச்சல் பிரச்சினைகளும் அவர்களுக்குத்தான் புரியும்!

பி. ராசகோபால்; ஹார்விப்பட்டி.

(?) விதி என்றால் என்ன?

கம்யூனிஸ்ட் கட்சிக்கும், மாஸ்கோ பக்திக்கும் உள்ள தொடர்பைப் போல மாற்ற முடியாதது—என்று சொல்கிறார்கள் புராணிகர்கள்!

கா. குருசாமி; காட்டூர்.

(?) நேரு ரஷ்யா சென்றபோது தன் மகள் இந்திராவை அழைத்துச் சென்றார். இப்போது புல்கானின் இந்தியா வரும்போது தன் மகளையும் அழைத்து வருவாரா?

புல்கானின் ரஷ்யப் பிரதமர் என்ற முறையிலேதான் வரப் போகிறார்! எனவே அவரோடு அவருடைய சொந்தக்காரர்கள் யாரும் வரமாட்டார்கள்!

எம். எப். பாபு; மயிலை.

(?) சென்னையை அழகு படுத்துவது எது?

ஆட்டோ ரிக்ஷா; அலறிக்கொண்டு செல்லும் பைலட் சைக்கிள்; அதற்குப் பின்னே வரும் கவர்னர் கார்—இவைதான்!

(●) கார்மேகம்; ஏழுகிணறு.

(?) செத்தவர்களெல்லாம் 'அமரர்'ஆகிவிட முடியுமா?

எப்படி முடியும்? ஒரு திரு. வி. க. வினால் முடிந்ததா? மறைமலையடிகளால் முடிந்ததா? மார்பில் பூணூல் இருந்தால்தான் அமரராக முடியும்!

இரா. கோதண்டராமன்;
ஷெனாய் நகர்.

(?) வேதங்களை இசைத் தட்டுகளில் பதிவு செய்து ரேடியோவில் ஒலிபரப்பப் போகிறார்களாமே?

ஆமாம்; அந்தக் கூச்சல் ரேடியோ சங்கீதத்தைவிட இனிமையாக இருக்குமே—என்று நினைத்து சில ரேடியோ பிரியர்கள் சிரித்து மகிழ்கிறார்களாம்!

ம. குருச்சந்திரன்; திரிகோணமலை.

(?) நன்றியுள்ளது மனிதனா, நாயா?

நான் பிர்மாவாக இருந்திருந்தால் நன்றி காட்டும் விஷயத்தில் மனித உடலில் நாய்களின் உயிரைத்தான் புகுத்தியிருப்பேன்!

(?) மனம் போனபடி நடப்பவர்களை யார் மதிப்பார்கள்?

'ஆமாம் சாமிகள்'!

(?) ஏழைகள் சிந்தும் வியர்வையை எதற்கு ஒப்பிடலாம்?

ரோஜாவைக் கசக்கி எடுக்கப்படும் அத்தருக்கு!

(?) விதவை எதை விரும்புவாள்?

பெண்களே மலரைத்தானே விரும்புகிறார்கள்!

(?) அழகு மின்னலா?

இல்லை; உள்ளழகு என்றும் நிலைத்திருக்கும் இமயம்!

இலக்குமணப் பெருமாள்; மதுரை

(?) தற்சமயம் சுபாஷ்போஸ் இருந்திருந்தால்...?

இந்தத் தகுதியில்லாதார் ஆட்சியை ஒழிக்க அன்னியநாடொன்றின் உதவியை நாடியிருப்பார்!

(?) கற்புடைய பெண்களை நெருப்பு சுடாதா?

ஏன் சுடாது? அவர்கள் என்ன 'அஸ்டெஸ்டாஸ்' தகட்டையா ஆடையாக அணிந்து கொண்டிருக்கிறார்கள்?

(?) ஏழைக்கும், எழுத்தாளனுக்கும் 'எமன்' எது?

ஏழைக்கு முறிந்துபோன ஆட்சி; எழுத்தாளனுக்கு ஒடிந்து போன பேனா!

மு. சீனுவாசன்; அறந்தாங்கி

(?) சீன நாட்டிலிருந்த கோமிண்டாங் கட்சிக்கும், இந்தியாவிலுள்ள காங்கிரஸ் கட்சிக்கும் உள்ள வித்யாசம் என்ன?

கோமிண்டாங்குகள் ஒளிந்து கொள்ள பார்மோசா கிடைத்தது; இவர்களுக்கு அது கூட கிடைக்காதே!

# பொங்கல் மலர்
## 1956.

★

## எண்ணங்களை எழுதுங்கள்!

★

★சென்ற மலரில் 'மணிமகுடம்' நாடகம் பாதியுடன் நின்றுவிட்டது, ஆசிரியர் உடல்நிலை பாதிக்கப்பட்டதால்!

★அடுத்த பாதி, இந்த மலரில் தேவை என்கின்றனர் சிலர்! தனிப் புத்தகமாகவே வரட்டும்; மலரில் வேண்டாம்—என்கின்றனர் சிலர்!

★உங்கள் எண்ணமென்ன? எழுதுங்கள்! மற்றும், மலர் எப்படியெல்லாம் இருக்கவேண்டும்—என்ன விலையில் வெளியிடலாம்—என்ற விபரங்களையும் எழுதுங்கள். இயன்றவரை செயலாற்றுகிறோம்.

★மேலும் புகைப் படங்கள் பல வெளியிட்டு மலரை அலங்கரிக்க எண்ணியுள்ளோம். ஆகவே, புகைப் படம் பிடிப்பதில் ஆர்வமுள்ள தோழர்கள், நல்ல காட்சிகளைப் படமாக்கி அனுப்புங்கள்; வெளியிடுகிறோம்.

பொறுப்பாளர்,
பொங்கல் மலர்,
முரசொலி.

ஆசிரியரும், அச்சிடுபவரும், வெளியிடுபவரும் மு. கருணாநிதி, 'முரசொலி' அச்சகம், 4/128, மவுண்ட்ரோடு, சென்னை-2.